# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. IV** **Issue 9** **December 2014**

இம்மாத மலரில். . .

## பொருளடக்கம்

பக்கம்

லைப் டிவைன் . . . . . . . . . . . . . 2
இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 10
சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 11
யோக வாழ்க்கை விளக்கம். . . . . . 13
பூரணயோகம் - முதல் வாயில்கள். 16
அஜெண்டா . . . . . . . . . . . . . . . 18
அமெரிக்க வாழ்வின் நிறைவுகளும் குறைபாடுகளும். . . . . . . . . . . 20
அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . 34
ஆத்மாவின் இருமுனைகள் . . . . . 51
அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 53
**அன்னை இலக்கியம்**
பொறுமையால் வென்றாயோ?. . . 55

### ஜீவியத்தின் ஓசை

*எதையும்*

*செய்யாதவர்*

*செய்வது யோகம்.*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**அறிவிப்பு**

டிசம்பர் 2014 இதழுடன் சந்தா முடிவடையும் சந்தாதாரர்கள் உடனடியாக சந்தாவினைப் புதுப்பிக்க வேண்டுகிறோம்.

## ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## XXVII. The Sevenfold Chord of Being

Page 267
Para 10

Mind, Life and Matter are the lower trilogy.

They are also indispensable to all cosmic being.

This is not necessarily in conditions we know upon earth.

But they are indispensable in some kind of action.

The action may be luminous or puissant or subtle.

Mind is that faculty of Supermind which measures and limits.
It fixes a particular centre and views from that.

It views the cosmic movement and its interactions.

In a particular world, or plane, mind need not be limited.

Mind is a subordinate faculty.



## 27. சப்த ஜீவன்

மனம், வாழ்வு, ஜடம் என்பவை தாழ் நிலையிலுள்ள முக்கூறுகளாகும்.

எல்லா பிரபஞ்ச ஜீவனுக்கும் அவை இன்றியமையாதவையும் ஆகும்.

இது புவியில் நமக்குப் புரியும் அளவில் இருக்க வேண்டும் எனும் அவசியமில்லை.

ஆனால் அவை ஏதோ ஒருவிதமான செயல்பாட்டிற்கு இன்றியமையாதவையாகும்.

அச்செயல் ஒளி பொருந்திய அல்லது சக்தி வாய்ந்த அல்லது சூட்சுமமானதாக இருக்கலாம்.

மனம் அளவிடுவதும், வரையறை செய்வதுமான திறனுடைய சத்திய ஜீவியத்தின் ஒரு கருவியாகும்.

அது குறிப்பிட்ட ஒரு மையத்தை ஏற்படுத்தி அதன் வழியாகப் பார்க்கிறது.

பிரபஞ்சத்தின் சலனத்தையும், மற்றதுடன் அதன் செயல்பாட்டையும் பார்வையிடுகிறது.

ஒரு குறிப்பிட்ட உலகத்தில் அல்லது நிலையில் மனம் வரையறைக்குட்பட அவசியமில்லை.

மனம் ஒரு கீழ்ப்படியும் நிலையிலான திறன்.

But, one who uses it can see things from other standpoints.

Or he can see things from the real Centre of all.

He can see in the vastness of a universal self-diffusion.

Still he must fix himself normally in his own firm standpoint.

This is for certain purposes of divine activity.

Suppose there was only universal self-diffusion.

Or if there were only infinite centres without a limiting action.
Then there would be no cosmos.
It would be only a Being musing within Himself infinitely.

He would muse as a creator or poet may muse freely.

He would muse before proceeding to the work of creation.

This state may exist somewhere in infinite existence.

But it is not what we understand by a cosmos.

It would have a kind of order unfixed and unbinding.



ஆனால், அதை உபயோகப்படுத்துபவர் மற்ற காட்சிக் கோணங்களிலிருந்து விஷயங்களைப் பார்க்க முடியும்.

அல்லது எல்லாவற்றுக்குமான உண்மையான மையத்திலிருந்து அவரால் பார்க்க முடியும்.

பரந்த பிரபஞ்சத்தின் சுய வியாபித்த நிலையிலிருந்து பார்க்க முடியும்.

ஆனாலும் அவர் தன்னை தன் சொந்த இயல்பான காட்சிக் கோணத்தில் நிலைநிறுத்த வேண்டும்.

இது தெய்வீக நிலைக்குரிய செயல்பாட்டின் சில குறிக்கோள்களுக்கு அவசியம்.

ஒருவேளை வரையறையற்று சுயமாக பரவி வியாபித்த நிலையாக இருக்கலாம்.

அல்லது செயல் வரையறை இல்லாத அனந்தமான மையங்கள் மட்டும் இருக்கலாம்.
அப்போது பிரபஞ்சம் என்ற ஒன்றிருக்காது.
அது ஜீவன் அனந்த நிலைகளில் தனக்குள்ளே ஆழ்ந்து ஈடுபட்டிருப்பதாகும்.

ஒரு சிருஷ்டிகர்த்தா அல்லது கவிஞர் சுதந்திரமாக தன் உள்ளார்ந்த சிந்தனையில் ஈடுபடுவதுபோல் அது தன்னுள் ஆழ்ந்திருக்கும்.

படைப்பை செயலாக்கும்முன் அது தனக்குள் ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருக்கும்.

இந்த நிலை அனந்தமான சிருஷ்டியில் எங்காவது இருக்கலாம்.

ஆனால் பிரபஞ்சம் என்பதாக நாம் அறிந்து கொள்வது அது இல்லை.

வரையறையற்ற, கட்டுப்படுத்தாத ஒழுங்கு முறை அதற்கு இருக்க வேண்டும்.

Such an order Supermind might evolve.

Before proceeding to its work of fixed development, it might do so.
It would proceed to measurement and interaction of relations.
For that measurement, Mind is necessary.
Mind needs to be aware only as a subordinate action of Supermind.
It need not develop relations on the basis of egoism.

This we see active in terrestrial Nature.

Page 268
Para 11

Once Mind exists, Life and Form follow.

Life is simply the determination of force and action.
It is the determination of relation and interaction of energy.

The interaction is from many fixed centres of consciousness.

They are not fixed in place or time.
They are in a persistent coexistence of beings or soul-forms of the Eternal.
They support a cosmic harmony.
That life may be very different from life as we know or conceive.



அந்த ஒழுங்குமுறையைச் சத்திய ஜீவியம் வெளிப்படுத்துவதாக இருக்கலாம்.
வரையறைக்குட்பட்ட வளர்ச்சியை செயல்படுத்தும்முன் இதைச் செய்வதாக இருக்கலாம்.
அதைத் தொடர்ந்து, அளவீடு செய்வதிலும் மற்றவைகளுடன் தொடர்புக்கான செயலிலும் அது ஈடுபடுகிறது.
அளவிடும் செயலுக்கு மனம் அவசியமாகிறது.
சத்திய ஜீவியத்தின்கீழ் செயலாற்றும் அளவிற்கு மனம் தன்னையறிந்தால் போதும்.
அது அகந்தையின் அடிப்படையில் தொடர்புகளை ஏற்படுத்தும் அவசியமில்லை.
இது புவியுலகத்தின் இயற்கை சக்தியில் அதிகமாக செயல்படுவதைக் காணலாம்.

மனம் என்று ஒன்று இருந்தால், வாழ்வும் தோற்றமும் அதைத் தொடர்ந்து வரும்.
வேகம் மற்றும் செயலை நிர்ணயம் செய்வது வாழ்வாகும்.
அது தொடர்புகளை நிர்ணயிப்பதும், சக்திப் பரிமாற்றமும் ஆகும்.
இப்பரிமாற்றம் ஜீவியத்தின் பல நிலையான மையங்களிலிருந்து எழுகிறது.
அவை காலம் அல்லது இடத்தில் நிலைப்படவில்லை.
அவை ஜீவன்களின் உறுதியான உடனிருத்தலாகவும் அல்லது சாசுவதமானதின் ஆத்ம ரூபங்களாகவும் உள்ளன.
அவை பிரபஞ்ச ஒற்றுமைக்கு ஆதரவு தருகின்றன.
அவ்வாழ்வு நாமறிந்த வாழ்விலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கலாம்.

Essentially it would be the same principle at work.
That principle we see here figured as vitality.

The ancient Indian thinkers called it Vayu or Prana.

It is the life-stuff, the substantial will and energy in the cosmos.
It is working out into determined form.
It is working out into action and conscious dynamis of being.
Substance too might be very different from our sense of material body.
It would be much more subtle, much less rigidly binding.

Its law of self-division and resistance would be less binding.

The body or form might be an instrument and not a prison.

Yet some determination and form and substance would be necessary.
This would be necessary for the cosmic interaction.
Even if it were only a mental body .
Or it might be something more luminous and subtle.

It might be more puissantly and freely responsive than the freest mental body.



அடிப்படையில் அதே தத்துவம் செயல்படுவதாகும்.
நாம் இங்கு பார்க்கும் அத்தத்துவம் உயிரின் வீரியமாக கருதப்படுகிறது.
பண்டைய இந்தியச் சிந்தனையாளர்கள் அதை வாயு அல்லது பிராணன் என்றழைத்தனர்.
அது வாழ்விற்கான மூலப்பொருள், பிரபஞ்சத்தில் உறையும் திடமான உறுதி மற்றும் சக்தி.
அது நிர்ணயம் செய்யப்பட்ட தோற்றமாக உருவாகிறது.
அது செயலாக மற்றும் ஜீவனின் தன்னையுணர்ந்த உள்ளுறைத் திறனாக உருவாகிறது.
அதன் பொருளும் நாம் உணரும் ஜட உடலை விட வேறுபட்டிருக்கலாம்.
அது மிகவும் நுட்பமானதாகவும், உறுதி மிகவும் குறைந்த பிணைப்பாகவும் இருக்க வேண்டும்.
அதன் சுய பிரிவினைக்கான சட்டம் மற்றும் தாங்கும் ஆற்றல் குறைந்த கட்டுப்படுத்துதலை உடையது.
உடல் அல்லது உருவம் ஒரு கருவியாக இருக்க வேண்டும்.
அது ஒரு சிறையல்ல.
இருந்தாலும் சில நிர்ணயம், உருவம் மற்றும் பொருள் அவசியம்.
இது பிரபஞ்ச செயல் பரிமாற்றத்திற்கு அவசியம்.
அது மனதிற்கான ஒரு உடலாக இருக்கலாம்.
அல்லது அதிகமாக ஒளிமயமானதும் சூட்சுமமானதுமாக இருக்கலாம்.
அதிக வலிமை பொருந்திய, மனதைவிட சுதந்திரமாக செயல்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

## இம்மாதச் செய்தி

# நல்ல எண்ணம்

# எண்ணமற்ற மௌனம்





### Page 167: All here is dreamed or doubtfully exists

### இருப்பதெல்லாம் கனவு, நினைப்பதெல்லாம் ஐயம்

- ✡ கனவு காண்பது யார்? எங்கிருந்து பார்க்கிறாள்?
- ✡ அது தெரியவில்லை, அது தெளிவற்ற யூகம்
- ✡ அல்லது உலகம் உண்மை, நாம் கடுகளவு சிறியவர்
- ✡ மேடையின் பெருமைக்குப் பத்தாது
- ✡ வாழ்வின் சிறு அலை அசுரனின் வேகத்தைக் குறுக்கிடுகிறது
- ✡ ஆத்மாவற்ற பிரபஞ்சம் பவனி வரும் பாதை
- ✡ உருளும் சிறிய உருண்டையின் வயிற்றுள்
- ✡ சிறிய தற்செயலாய் எழுந்த கோளத்துள் மனம் பார்க்கிறது
- ✡ யார் நான், இதெல்லாம் என்ன என வியப்புறுகிறது
- ✡ இருப்பினும் உள்ளூறை அகக்கண் பார்வைக்கு
- ✡ ஜடத்தின் பார்வையற்ற பொருளில் விநோதமாக உருவான
- ✡ சிறு கூர்ந்த சித்திரம் வரையும் முறை
- ✡ காணும் ரூபங்களை உலகின் ஆத்ம விழிப்பான அடிப்படையெனக் கொள்ளும்
- ✡ கீழுள்ள மங்கிய ஒளியில் இதுவே நாம் கண்ட காட்சி
- ✡ இதுவே ஜடம் அனந்தம் என்பதன் அடையாளம்
- ✡ இதுவே கண்ட படத்தின் காணாத நோக்கம்
- ✡ விஞ்ஞான ராட்சசி, அவள் அரங்கம் பெரியது
- ✡ அவள் கூர்ந்த ஆராய்ச்சியின் விஷயத்தை அவள் கொட்டிப் பொழிகிறாள்
- ✡ பிரம்மாண்டமான அவள் புற உலகை கணிதத்தாலறிந்தாள்

✡ புலனுணர்வின் வட்டத்துள் தெறிப்பாக செயல்படும் பகுத்தறிவு
✡ பரந்த எண்ணம் பிடிபடாத உரையாடல்
✡ பிரம்மாண்டமான தெளிவற்ற எண்ணங்களில் விளையாடும் ஆட்டம்
✡ சூன்யத்தின் சாரம் அவள் பொற்காசு
✡ அதன் அஸ்திவாரத்தின் உயர்ந்த பண்புகளை நாமறியோம்
✡ இத்திவால் சூழலில் மதம் மட்டும் நிலைக்கிறது
✡ சந்தேகமான செல்வத்தை நம் இதயத்திற்கு அளிக்கிறது
✡ ஆதாரமில்லாத செக்கை பிரம்ம பாங்கிற்கு அனுப்புகிறது
✡ இகவாழ்வின் ஏழ்மை பரவாழ்வில் பழிவாங்கும்
✡ அர்த்தமற்ற வாழ்வை ஆத்மா உதறித் தள்ளும்
✡ தெரியாத கறுத்த உலகுக்குள் எடுத்துப் போகிறது
✡ மரணமே அமரத்துவத்தின் வாயில்
✡ இதுவும் தற்காலிகமான திட்டமே
✡ அளவோடுள்ள புலனில் எழுதிய பொய்யான தோற்றம்
✡ மனம் அரைகுறையாகத் தன்னைக் கண்டுகொண்டது

## ஜீவிய மணி

பாகவதர் கிருஷ்ணனுடைய நகைகளை விவரித்ததைக் கேட்ட திருடன் அவனைப் பிருந்தாவனத்தில் தேடிக் கண்டு, அந்நகைகளைப் பெற்றபின், கிருஷ்ணன் ‘உனக்கு என்ன வேண்டும்?’ என்றார். ‘தினமும் உன்னைக் காணும் பாக்கியம் வேண்டும்’ என்றான் திருடன்.

**திருடனுடைய ஆத்மா விழித்தது.**
**விழித்தபின் தேடுவது ஒன்றே.**



## யோக வாழ்க்கை விளக்கம்

**22/14. சொல்லி சாதிப்பது சொல்பம். சொல்லாமல் சாதிப்பது அபரிமிதம். பெரும் சாதனைகள் சொல் எழ அனுமதிப்பதில்லை. சாதனையை நாடாத ஆத்மா சாதனையின் மூலம். சாதனை மனிதனுக்கு. சாதனை தேவையற்ற ஆத்மா சாதனையை ஏற்று சாதிப்பது சிருஷ்டி. மனித சாதனை வேதனையிலிருந்து மீள்வது மனிதனில் தெய்வம் சாதிப்பது, உடலின் சாதனை.**

- எல்லோரும் செய்வது சாதனையானாலும், எவராலும் முடியாததை முடிப்பதையே சாதனை என்போம்.
- பெரியவர் அன்றாட அனுபவம், சிறுவருக்குச் சாதனை.
- ஐம்பது வயதில் எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக் கொள்பவருக்கு ஒரு புத்தகம் படித்து முடிப்பது சாதனை.
- 1950-இல் அமெரிக்கா போவது இந்திய இளைஞர்கட்குப் பெரும் சாதனை.
- திருமணமாகாத பட்டதாரிப் பெண் அந்த நாளில் கல்லூரியில் வேலை செய்தார்.
  அங்கு வந்த அமெரிக்கப் பெண் புரொபசருக்கு இவரைப் பிடித்து விட்டது.
  அமெரிக்காவிற்கு M.Sc. படிக்கக் கூப்பிட்டார்.
  அது பெரிய வாய்ப்பு, எளிதில் கிட்டாதது.
  அமெரிக்கா போகலாம், பட்டம் பெறலாம், திரும்பி வந்தால் திருமணமாகுமா?
  திருமணம் செய்தபின் அமெரிக்க அழைப்பை ஏற்றுப் பட்டம் பெற்றார்.
- கார் ஓட்டக் கற்றுக் கொள்ளும்பொழுது clutch சரியாக விழுவது பெரும் சாதனை.
- அகதி முகாமில் வந்தபின் தானிருந்த பெரும் நிலைகள் பயன்படாது. ஒரு நாள் போவதும் சாதனை.

- தகப்பனாரை இழந்தபின் இளைஞன் உடன் பிறந்தவர் திருமணத்தைச் செய்வது சாதனை.
- பெரியவர் செய்வதைச் சிறியவர் செய்வது சாதனை.
- நெடுநாளில் செய்வதைச் சில நாளில் செய்வது சாதனை.
- சாதனையின் வகை ஆயிரம்,
  பணம் சம்பாதிப்பது சாதனை.
  எலக்ஷனில் ஜெயிப்பது சாதனை.
  எலக்ஷனில் பணம் கொடுக்காமல் ஜெயிப்பது சாதனை.
  உயர் பதவியிலுள்ள பழைய நண்பன் மாறாமலிருப்பது சாதனை.
  The Life Divine படித்தது புரிவது யோக சாதனை.
  புத்தகம் எழுத்துப் பிழையின்றி அச்சடிப்பது சாதனை.
- விவரமாகச் சொல்லிச் சாதிக்கலாம். அது சிறிய சாதனை.
- எதையும் சொல்லாமல் சாதிப்பது பெரிய சாதனை.
- பொறுப்பற்ற கணவன் வீண் செலவை நிறுத்தி குடும்பத்தைக் காப்பது சாதனை. மனைவி அவனிடம் எதையும் கேட்காமல், வாய் மூடி மௌனியாக இருந்து, பணம் தராதபொழுது கேட்காமல், வீட்டிற்கு வராமலிருப்-பதைக் கேட்காமல், வந்தபொழுது கணவனைக் கவனிக்கும் மனைவி அரிது. அவனே மனம் மாறுவது அவளுடைய மௌன சாதனை.
- விலை மாது வாடிக்கைக்காரரைக் கணவனாக நடத்துவது சாதனை.
- தமிழ் மீடியம் பிள்ளைகள் இங்கிலீஷ் எழுதுவது சாதனை, பேசுவது பெரும் சாதனை.
- நம்மூர் பஸ் ஸ்டாண்டில் கூட்டம் தானே க்யூவாக மாறுவது சாதனை.
- அன்பர்கள் சோதனையாக மேற்சொன்ன எதையும் மௌனமாக சமர்ப்பணத்தால் செய்தால் ஒரு முறை ஆச்சரியப்படும்படி நடக்கும். அது யோக சாதனை.



- சண்டிகேசி மனைவி, சிடுமூஞ்சி எனப் பெயர் வாங்கியவள் கணவன் சமர்ப்பணத்தால் விருந்தாளிகளை உபசரிப்பது யோகத்தைக் கடந்த சாதனை.
- சுயநலத்தை ரசிப்பவர், பிறரை அவமானப்படுத்திப் பெருமைப்படுபவர், கொடுமைப்படுத்தி இன்பம் துய்ப்பவரை தேவையே இல்லாத காலத்தில்

  **விரதமாக ஏற்று மௌனமாகப் பணிந்து**

  **மனம் கோணாமல் சுயநலமி சந்தோஷப்படும்**

  **வகையில் நடந்து, சமர்ப்பணத்தால்**

  **அவர் செயலும் மனமும் மாறுவது, எதிராகத்**

  **திரும்புவதைக் காண்பது பரிபூரண யோகத்திற்கு**

  **மட்டும் உரிய வாழ்க்கை சாதனை.**
- மௌனம், சமர்ப்பணம், பணிவு, அகந்தை முனை மழுங்குவது போன்றவை யோகப் பாதையிலும் உயர்ந்த சாதனையைப் பெற்றுத் தரும் கருவிகள்.

## ஜீவிய மணி

அன்னை நம்மை நாடிவரும் தெய்வம். அவர் வழங்குவது அருள். தேடிப்போக வேண்டிய தெய்வம், தேடிவந்து கொடுத்தால் மனிதன் அதன் உயர்வை அறிவதில்லை. அதனை மறுக்கிறான். குறை கூறுகிறான். அன்னையின் அருளைப் பெறுவதிலும் பல நிலைகள் உண்டு. ஒருவன் சுதந்திரமாக அன்னையை நாடினால், ஆன்மாவில் அன்னையை விழைந்தால் அதற்குப் பலன் பெரிது. பிறரைப் பின்பற்றியோ, நூலைப் படித்தோ பிறர் சொல்லைக் கேட்டோ ஒருவன் அன்னையை ஏற்கலாம். அன்னையிடம் பலன் பெறலாம். ஆனால் அதற்கு பயன்கள் சிறியவையே.

கர்மயோகி

## 107. Life Response - எதிரியை உயர்த்தும், தாழ்த்தும் வாழ்வின் எதிரொலி

- Life Response தவறறியாதது. இது பலவகையிலும் எழும்.
- நிலையை உயர்த்தும், எதிரியை மடக்கும், அழித்தவனை வாழ வைக்கும், அழிக்க முயல்பவனை அழிக்கும். வாழ்வின் எல்லா அம்சங்களும் எதிரொலிக்குண்டு.
- எந்த அளவில் ஒருவருக்கு Life Response இருந்தாலும் அவருக்கு யோகம் பலிக்கும்.
- பவர் என்பதை நல்ல முறையில் மட்டும் பயன்படுத்துவது முறை.
- மந்திரம் (Magic) என்பது வேத காலப் பொக்கிஷம். அதர்வண வேதம் அதற்குரியது என்பது பாமர மக்கள் வழக்கு. மாயத்தை ஏற்படுத்தும் மந்திரம் ஆச்சரியமான உண்மை-களையும் சாதிக்கும் எனப் பகவான் கூறுகிறார். நடைமுறை-யில் மந்திரம் மனிதனை அழிக்கப் பயன்படுகிறது. அதற்கு எதிரானது

  **மனித நிலையை உயர்த்துவது.**

  **பிறர் நிலையை உயர்த்துவது சிறப்பு.**

  **தன்னிலையை உயர்த்துவது தவறில்லை.**
- குதர்க்கமான குரு அல்பமானவர். சிஷ்யர் இவரை குருவாக ஏற்கவில்லை.

  குரு ஸ்தானத்தை சுயநலமி தானே ஏற்படுத்திக் கொண்டார்.

  அன்பன் தன் ஆத்ம சுத்திக்காக ஏற்றுக்கொண்ட கட்டுப்பாடு-களில் (discipline) சுயநலமான பலன் பெற 'குரு' முடிவு செய்து விஷயம் நடக்கிறது.



- அன்பனுடைய பல கட்டுப்பாடுகளில் ஒன்று தனக்கு வரும் டாலர் (dollar) செக்குகளை தன் அக்கௌண்ட்டில் போடாமல் குரு அக்கௌண்ட்டில் போட்டு பணம் எடுப்பது.
- அன்பனுக்குக் கார் பரிசளிக்க ஒருவர் $3000 செக் கொடுத்தார். அன்பன் வழக்கம் போல் குருவிடம் அதைக் கொடுத்தார். குரு பெற்றுக் கொண்டு மறுநாள் செக்கைத் திருப்பிக் கொடுத்து ''உன்னுடைய அக்கௌண்ட்டில் போட்டுக் கொள்'' என்றார். தன் அக்கௌண்ட்டில் போட்டால் அது அன்பன் ஆசீர்வாதம் பெறுவது என 'குரு' தன் நிலையைத் தானே உயர்த்திக் கொண்டார்.
- Life Response செயல்பட்டது. குருவிடம் வேறொருவர் $1000 கேட்டு வந்தார்.
- மறுநாள் குரு சிஷ்யனிடம் ''அந்த செக் வேண்டும்'' எனக் கேட்டார்.

  செக் பாங்கிற்குப் போய் பணமாகி விட்டது.

  குருவிற்கு டாலர் கிடைக்கவில்லை.

  வாழ்க்கை ஒரு அன்பர் வாழ்வில் எதிரொலியை எழுப்பு-மானால் அவருக்கு யோகம் பலிக்கும் எனப் பொருள்.

  அன்பன் பங்கு கொள்ளாமல் குதர்க்கமானவர்க்கு வாழ்க்கை குதர்க்கமாக பதில் கொடுத்த நிகழ்ச்சியிது.

**எதிரிக்கும் எதிரொலி நல்லது செய்யும்.**
**அதுவே நாம் எதிரொலியைப் பயன்படுத்தும் முறை.**
**நல்லதைப் பெற்ற எதிரியும் அல்பமாகத் தொந்தரவு செய்யத் தவற மாட்டார்.**

### ஜீவிய மணி

**எவர் எப்படிப் பழகினாலும் நாம் பிரியமாகப் பழகினால்தான் நம் மனம் சரியாக இருப்பதாக அர்த்தம்.**

## அஜெண்டா

### பல இடங்களில் ஒரே சமயத்தில் பகவான் ஸ்ரீ அரவிந்தர்.

Volume 10, page 88

- ஒரு மகான் பிறர் திருஷ்டியில் வெளிப்பட பார்ப்பவர் நிலையும், தெரிபவர் நிலையும் உயர வேண்டும்.
- ஆசை, ஆர்வம், ஈடுபாடு, பக்தி என மனம் அறியும் பல நிலைகள் உள்ளன.
- நம்மை அறியாத ஒருவரை நாம் பார்த்ததில்லை என்றாலும், ஆழ்ந்து நினைத்து உருகினால் அவர் உருவம் மனத்தில் உதயமாகும். இது மனத்தின் திறன்.
- தெரிந்தவர் ஒருவர் அதுபோல் மனத்தில் எழுந்தால், எதிரில் நிற்பார்.
- கல்லூரி ஹாஸ்டலில் உள்ள அண்ணனை தங்கை அது போல் நினைத்தால் அவள் குரல் அவனுக்குக் கேட்கும்.
- விஸ்வாமித்திர காயத்ரியை முறைப்படி உபாசிப்பவருக்கு அவர் விரும்பினால் விஸ்வாமித்திரர் மனத்தில் தோன்றுவார்.
- 40 ஆண்டிற்குமுன் பார்த்த நண்பரை அது போல் நினைத்தால், அவர் மனதில் தோன்றினால் அவர் அந்த வாரம் எதிரில் தென்படுவார்.
- பிதிர்ராஜ்யம், முன்னோர் ஆசிகளை நாம் அறிவோம்.
- தொடர்பு விட்டுப் போன உறவினர், நண்பர், 20,000 ரூபாய் சம்பளத்தில் வேலை செய்வதாகக் கேள்விப்பட்டு அவர் பெரும் சொத்து பெற மனம் மேற்சொன்னது போல் கொஞ்ச நாள் விழைந்து மறந்தபின் சில ஆண்டுகட்குப்பின் அவர் அன்பர் நினைத்த அந்தச் சொத்தை பெற்று விட்டார் என்ற செய்தி வரும்.

**இது வாழ்வின் கூறுகள்.**

- பொதுவாக ஒரு ரிஷி முக்தியடையும் பொழுது அவர் 1000 இடங்களில் தோன்றுவார்.
- கூலி வேலை செய்தவர் 100 கல்லூரிகள் நடத்துகிறார் என்றால், அவருக்குத் திறமை, உழைப்புள்ளது தெளிவு. அவர் வாழ்வில் அவரை அன்பாக இதமாக நினைந்து அன்பால் வாழ்த்தும் ஜீவன் ஒன்றிருந்தால் அது உலக வழக்கை நமக்குணர்த்தும்.
- சனியனிருப்பதற்கு ஏராளமான அடையாளங்களுண்டு. அவற்றுள் தலையில் காக்கை அடிப்பது ஒன்று. அவர் வாழ்வு அதிர்ஷ்டமாகி, அவர் தொடர்புள்ள அனைவரும் அதிர்ஷ்டம் பெறுவதை அவர் அன்பரானபின் அறிந்து கடந்த கால சமர்ப்பணத்தில் அந்த துர்பாக்கியமான ஆண்டில் புதுவைக்கு உறவினரை சந்திக்க வந்தது நினைவு வந்தது.

**சனியன் விலகி, அதிர்ஷ்டமாக மாறுவது திருவுருமாற்றம்.**

- ஆன்மீக அம்சம், ஆன்மீக அதிர்ஷ்டம், ஆன்மீகப் பெருந்தன்மை, ஆன்மீக உயர்வு, ஆன்மீக பெருமையென ஏராளமானவையுண்டு. கலகலப்பாக சிரித்து மகிழும் அன்பருக்கு இவற்றுள் ஒன்று நெல்லிடையிருந்தால் அவர் அன்பரானபின் அது உலகளவு பெருகும்.

**அவரை நினைப்பவருக்குக் குதூகலம் எழும்.**
**அவர் ஆன்மீகப் பொக்கிஷம்.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

'உலகம் ஆனந்தத்தால் சிருஷ்டிக்கப்படுகிறது. செயல்கள் ஆனந்தத்தால் இயங்குகின்றன. முடிவாக அவை ஆனந்தத்தை நாடுகின்றன' என உபநிஷதம் கூறுகிறது. உபநிஷதம் கூறும் ஆனந்தம் - Bliss - சச்சிதானந்தத்தின் பேரானந்தம். ஸ்ரீ அரவிந்தம் கூறும் ஆனந்தம் - Delight - அதைவிடப் பெரியது. பேரின்பத்தைவிடப் பெரிய ஆனந்தமான சிருஷ்டியின் ஆனந்தம் அது. மேலுலகில் உள்ள பேரின்பத்தை நம் வாழ்வில் வெளிப்படுத்த சச்சிதானந்தம் முயன்று வெற்றி பெறுவது, இதுவரை உலகில் எவரும் அறியாத ஆனந்தம். இன்று விமானத்தில் சாதாரண மனிதர்கள் போகிறார்கள். அன்று அரசனோ, சக்ரவர்த்தியோ அறியாத சௌகரியம் அது. சத்திய ஜீவியம் உலகில் வந்தபின் அன்பர்கள் அனுபவிக்கும் ஆனந்தம் இது.

# அமெரிக்க வாழ்வின் நிறைவுகளும் குறைபாடுகளும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி

விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவு: திரு. அசோகன்

சொற்பொழிவாற்றிய தேதி: 15. 08. 2014

**5. அமெரிக்கர்கள் மிகவும் Informal-ஆக இருப்பார்கள்:**

இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் formalities மற்றும் பட்டங்கள் மிகவும் முக்கியம். பிரபு வம்ச குடும்பங்களில் தந்தையாரையே சார் என்றுதான் அழைக்க வேண்டும். தாயாரை M'am என்றுதான் அழைக்க வேண்டும். அங்கே பட்டம், படிப்பு, டிகிரி, டைட்டில் எல்லாம் மிகவும் முக்கியம். இங்கிலாந்து அரசரை Your Majesty என்றுதான் அழைக்க வேண்டும். வேறு எந்தமாதிரி யார் அழைத்தாலும் அவர் அங்கிருந்து உடனே வெளியேற்றப்படுவார். Edward VIII என்ற இங்கிலாந்து அரசர் விவாகரத்துப் பெற்ற ஒரு அமெரிக்கப் பெண்மணியை மணந்தார். அதனால் அவர் பதவியை இழக்க நேரிட்டது. பதவி இழந்தபின்கூட அவர் தம் மனைவியை Your Highness என்றுதான் மற்றவர் கூப்பிட வேண்டும் என்று விரும்பினார். முறைகளை இந்தளவிற்கு வலியுறுத்தும் இங்கிலாந்து நாட்டிற்கு வந்த அமெரிக்கர் ஒருவர் இங்கிலாந்து அரசனுடன் விருந்துண்டுவிட்டு, Your Majesty என்று சொல்லாமல் வெறுமனே 'ஏ! அரசரே உங்களுக்கு நன்றி' என்று சொல்லி-விட்டுப் போனார்.

ஐரோப்பிய நாடுகளில் பேராசிரியர் பதவியெல்லாம் டாக்டர் பட்டம் வைத்திருப்பவருக்குத்தான் கிடைக்கும். ஆனால் அமெரிக்காவில் Ph.D. இல்லாதவர்கள்கூட பல்கலைக்கழகங்-களில் அதிபர்களாகப் பணியாற்றுவதுண்டு. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முறையாக திருமணம் செய்து கொள்ளாமல், ஆணும் பெண்ணும் சேர்ந்து குடும்பம் நடத்துவது அமெரிக்காவில் சர்வ சாதாரணமாக உள்ளது. அதில் ஆச்சரியம் என்னவென்றால் இப்படிக் குடும்பம் நடத்தும் தம்பதிகளுக்குப்



பிறக்கும் குழந்தைகளுக்கு, முறையாக திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு என்ன மரியாதை கிடைக்கிறதோ அதே மரியாதை கிடைக்கும். 1960-க்குமுன் வெள்ளைக்கார குழந்தைகள் பள்ளிகளில் கறுப்பின குழந்தைகளுடன் சரியாகப் பழகாமல் தனியே நிற்பார்கள். ஆனால் இதன்பின் இதெல்லாம் மாறிவிட்டது. கலர் வித்தியாசம் தெரியாமலேயே பழகுகிறார்கள். Academic கருத்தரங்குகளும் மாநாடுகளும் ஐரோப்பாவில் நடைபெற்றால் கலந்து கொள்பவர்கள் கோட், சூட் மற்றும் டை அணிந்து கொண்டுதான் வர வேண்டும். அது இல்லாமல் வந்தால், கருத்தரங்கில் கலந்து கொள்வது கடினமாகும். ஆனால் அமெரிக்காவில் இதையெல்லாம் எளிமைப்படுத்தி விட்டார்கள். ஐரோப்பாவில் கருத்தரங்கில் கலந்து கொள்வதை அமெரிக்காவில் workshop என்று மாற்றிச் சொல்கிறார்கள். நம் நாட்டில் workshop என்றால் ரிப்பேர் வேலை செய்யும் இடமாகும். ஆனால் அமெரிக்கர்கள் அதற்கான பெயரை கருத்தரங்கிற்கு பயன்படுத்தும் அளவிற்கு informal-ஆக இருக்கிறார்கள்.

நம் நாட்டில் சிறியவர்கள், பெரியவர்களை பெயர் சொல்லி அழைத்தாலே, பெரியவர்கள் அதை மரியாதைக் குறைவாக எடுத்துக் கொள்வார்கள். ஆனால் அங்கே அப்படி எடுத்துக் கொள்வதில்லை. இம்மாதிரியே கணவர்களை மனைவிகள் பெயர் சொல்லி அழைக்கும் பழக்கமும் அங்கே உண்டு. அதை கணவர்களும் தவறாக எடுத்துக் கொள்வதில்லை. நம் நாட்டுக் கம்பெனிகளில் மேலதிகாரிகள் ஊழியர்கள் இருக்கும் இடத்திற்கு வந்தால், என்ன வேலை நடக்கிறது என்பதைப் பார்க்கத்தான் வருவார்களே தவிர ஊழியர்களோடு சகஜமாக உறவாடமாட்டார்கள். ஆனால் அமெரிக்கக் கம்பெனிகளில் அவ்வாறு பழகினால்தான் ஊழியர்களை உற்சாகப்படுத்த முடியும் என்று மேலதிகாரிகள் புரிந்து கொண்டுள்ளதால், அந்தஸ்து வித்தியாசமின்றி work spot-க்கு வரும்போது ஊழியர்களிடம் பழகுகிறார்கள். அமெரிக்க ஜனாதிபதிகள்கூட சம்பிரதாய முறைகளையெல்லாம் அனுசரிப்பதுண்டு. ஒரு

ஜனாதிபதியின் பதவி முடிவிற்கு வந்து அடுத்த ஜனாதிபதி பதவி ஏற்கும்போது புதியவர், பழையவருக்கு தேநீர் விருந்து தரும் பழக்கமுண்டு. ஆனால் எல்லா ஜனாதிபதிகளும் இதைக் கடைப்பிடித்தனர் என்று நாம் சொல்வதற்கில்லை. உதாரணமாக **Truman** என்ற அதிபர் போய் **Eisenhover** என்ற புதிய அதிபர் பதவி ஏற்றார். ஆனால் புதியவர் பழையவருக்கு வழக்கமாக தரும் விருந்து தரவில்லை. நம் நாட்டில் இம்மாதிரியான தவறு நிகழ்ந்திருந்தால், அதை முதல் பக்கத்தில் பெரிய செய்தியாக வெளியிட்டிருப்பார்கள். இம்மாதிரி பல நிகழ்ச்சிகள் அமெரிக்க அதிபர்கள் வாழ்க்கையில் நடந்துள்ளது. **Carter** பதவி இழந்து **Reagan** என்பவர் பதவிக்கு வந்தார். **Carter** வெள்ளை மாளிகையைக் காலி செய்வதற்கு இன்னும் பல நாட்கள் இருந்தபோதே **Reagan**-இன் மனைவி **Carter**-ன் மனைவியை அணுகி நீங்கள் இப்பொழுதே காலி செய்தால் தேவலாம். நான் வெள்ளை மாளிகையை எனக்குப் பிடித்த வகையில் அலங்கரிக்க விரும்புகிறேன் என்று சொன்னாராம். **Roosevelt** அவர்கள் ஜனாதிபதியாக வெற்றி வாகை சூடியபோது இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் அவருக்கு வாழ்த்து தந்தி அனுப்பினார். வாழ்த்தியதற்கு நன்றி தெரிவித்து பதில் தந்திகூட **Roosevelt** அனுப்பவில்லை. இம்மாதிரி ஒரு அலட்சியத்தை எந்த ஆங்கிலேயனாலும் ஏற்கவே முடியாது. முறை என்று பார்த்தால், ஐரோப்பாவில் அவைகளெல்லாம் சட்டம்போல் கருதப்பட்டு கடைப்பிடிக்கப்படுகிறது. அந்தளவிற்கு முக்கியத்துவம் முறைகளுக்கு அமெரிக்காவில் வழங்கப்படாதது ஐரோப்பியர்களுக்குப் பெரும் குறையாகி விட்டது. **Iacocca Chrysler Car** கம்பெனியில் அதிபராகப் பதவி ஏற்றபோது கார் விற்பனையை அதிகரிக்க அவரே டி.வி, கார் விளம்பரங்களில் தோன்றி வாடிக்கையாளர்களிடம் ஊக்கப்படுத்தும் வகையில் பேசினார். ஆனால் ஐரோப்பிய கார் கம்பெனிகளின் சேர்மென்கள் அவ்வாறு செய்வதற்கு வாய்ப்பே இல்லை. இந்தளவிற்கு அமெரிக்கர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் இடையே வித்தியாசமுள்ளது.



**6. அமெரிக்கர்கள் மாற்றத்தைப் பெரிதும் விரும்புகிறார்கள். ஆனால் மற்ற நாட்டு கலாச்சாரங்கள் மாற்றங்களை அனுமதிப்பதேயில்லை:**

மற்ற நாடுகளில் கருத்தரங்குகள் என்று சொல்வதை அமெரிக்கர்கள் **workshop** என்று சொல்கிறார்கள். அதையும் இப்பொழுது மாற்றி கருத்துப் பரிமாற்றம் **brain storming** என்று சொல்கிறார்கள். ஒரு காலத்தில் இதே அமெரிக்கர்கள்தான் பணம், வசதி, மாடர்ன் டெக்னாலஜி என்று பைத்தியமாக இருந்தார்கள். அவர்களே இப்பொழுது பணத்தைத் தேடி அலைவதில் அர்த்தமில்லை. அதைவிட உயர்ந்தது எதையாவது தேடவேண்டும், இந்திய ஆன்மீகத்தில்தான் நாம் தேடுவதற்கெல்லாம் விடையுள்ளது என்று இந்திய குருமார்களை அவர்கள் அமோகமாக வரவேற்கிறார்கள். 1960-வரை அமெரிக்கர்கள், நீக்ரோக்களைத் தள்ளி வைத்திருந்தார்கள். ஆனால், இன்று அவர்களே ஒரு நீக்ரோவை இரண்டுமுறை அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். எந்தளவிற்கு அமெரிக்கர்கள் மாற்றத்தை வரவேற்கிறார்களோ அந்தளவிற்கு அது அவர்களை ஊக்கப்படுத்துகிறது. ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் எந்தளவிற்கு **stability**-யை வலியுறுத்துகிறார்களோ அந்தளவிற்கு நமக்குத் தெம்பு அதிகரிக்கிறது. குறிப்பாக வேதம் போன்ற புத்தகங்களில் நாம் எந்த மாற்றத்தையும் அனுமதிப்பதே இல்லை. ஸ்ரீ அரவிந்தர் காயத்ரி மந்திரத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தார். ஆசாரம் மிகுந்தவர்கள் இன்னும் அந்த மாற்றங்களை ஏற்காமல்தான் உள்ளார்கள். 19-ஆம் நூற்றாண்டில் ஒரு ஆங்கிலேய அறிஞர் திருக்குறளில் ஒரு குறிப்பிட்ட குறளில் வார்த்தைகளை மாற்றினால் நன்றாக இருக்கும் என்றொரு கருத்துத் தெரிவித்தார். அதைக் கேட்ட தமிழ் பண்டிதரோ என்ன அபச்சாரம் இது என்று அலறினார். ஆங்கிலேயன் ஆண்டபோது நீதிமன்றங்களில் நீதிபதிகளை **Your Honour, Your Lordship** என்று விளிப்பதுண்டு. அந்தப் பழக்கத்தையே இன்னமும் மாற்றாமல் நாம் கடைப்பிடித்துக் கொண்டுதான் உள்ளோம். ஆனால் அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருந்தாலும், **Mr. President** என்றுதான் எளிமையாக

விளிக்கிறார்கள். **Your Highness, Your Excellency** என்றெல்லாம் விளிப்பதில்லை. சம்பிரதாயத்தை மாற்றுவது பொதுவாக எல்லா கலாச்சாரங்களிலும் எதிர்க்கப்படுகிறது. ஆனால் அமெரிக்காவைப் பொறுத்தவரை வலுவான எதிர்ப்பு ஒன்றுமில்லை. ஐரோப்பிய நாடுகளில் வெளியூர் வேலை என்றாலே பொதுவாக கசங்குவார்கள். ஐம்பது மைல்கள் அப்பாலுள்ள ஊர் என்றாலும்கூட யோசிப்பார்கள். சொந்த ஊர்ப் பற்று அவர்களுக்கு அவ்வளவு அதிகமாக இருக்கும். அமெரிக்காவில் இந்தச் சொந்த ஊர்ப் பற்று என்பது மிகவும் குறைவு. ஒரு சராசரி அமெரிக்கர் தன்னுடைய வாழ்நாளில் 13 தடவைகள் குடியிருக்கும் ஊரை மாற்றுகிறார் என்று ஆய்வில் கண்டறிந்துள்ளனர். கிழக்குக் கடற்கரையில் குடியிருப்பவர்கள் 3000 மைல்களுக்கு அப்பாலுள்ள மேற்குக் கடற்கரைக்கு எந்தவித தயக்கமுமில்லாமல் இடம் மாறுவார்கள். ஆனால் நம் நாட்டிலோ டில்லிக்கோ, கல்கத்தாவிற்கோ குடும்பம் இடம் பெயர வேண்டும் என்றால், அதை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக்கொண்டு மிகவும் தயங்குவார்கள். நம் நாட்டில் செய்தித்தாள்களுக்குக்கூட ஒரு பாரம்பரியம், சம்பிரதாய-முள்ளது. வழக்கமாக முதல் பக்கத்தில் வருகின்ற செய்திகளைத் தவிர விளம்பரங்களைக் கொண்டுவர வேண்டுமென்றால், அதற்கே ஆட்சேபணை எழும். ஆனால் அமெரிக்காவில் செய்தித்தாள்களை அவர்கள் சௌகரியம்போல் **design, font** என்று எல்லாவற்றையும் மாற்றிக் கொள்கிறார்கள். நாவல்களைச் சினிமாப் படங்களாக மாற்றும்போது ஐரோப்பாவில் நாவலி-லிருப்பதற்கும், சினிமாவில் வருவதற்கும் வித்தியாசமில்லாமல் ஐரோப்பியர்கள் பார்த்துக் கொள்வார்கள். ஆனால், அமெரிக்காவில் திரைப்பட டைரக்டர் தம் இஷ்டம்போல் கதையைத் திரைப்படத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்வார்.

**7. அமெரிக்கர்களின் குடும்ப வாழ்வில் பந்தபாசங்கள் மிகவும் குறைவு:**

இதுவரையிலும் அமெரிக்க வாழ்வின் சிறப்புகளைப் பார்த்தோம். இனி அந்நாட்டு மக்களுடைய வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளைப் பார்ப்போம். முதலில் நமக்கு பளிச்சென்று



நினைவிற்கு வருவது அமெரிக்கர்களுடைய குடும்ப வாழ்க்கைதான். கணவன் மனைவி என்றால் திருமண நாளிலிருந்து சாகும்வரை பிரியாமல் இருப்பார்கள் என்பதுதான் நாம் கண்டது. ஆனால் அமெரிக்காவில் திருமணங்கள் இவ்வாறு நிலைத்து நிற்பதில்லை. நடக்கும் திருமணங்களில் சரிபாதி 15 வருடங்களுக்குமேல் நீடிப்பதில்லை. இருவருக்கும் ஒத்துப்போகவில்லை என்று விவாகரத்தில் முடிகிறது. இப்படி விவாகரத்து செய்வதால், குழந்தைகள் எந்தளவிற்கு பாதிக்கப்-படுவார்கள் என்று தாயாரோ, தகப்பனாரோ கருதுவதில்லை. அவரவர் சுதந்திரம்தான் அவரவருக்கு முக்கியமாகி விடுகிறது. பிறந்த நாளிலிருந்தே குழந்தைகளைத் தனியாகத்தான் படுக்க வைக்கிறார்கள். நம் நாட்டில் தாய்மார்கள் பெற்ற குழந்தையைத் தம் பக்கத்தில்தான் படுக்க வைப்பார்கள். இதைக் கேள்விப்படும் அமெரிக்கத் தாய்மார்கள் ஆச்சரியப்படுகிறார்கள். இப்படிப் பிறந்த நாளிலிருந்தே தனியாக படுக்க வைக்கும்போது தாயாரின் அரவணைப்புக் குறைந்து குழந்தைக்கு ஒரு **insecurity** உண்டாகிறது. இதையெல்லாம் எடுத்துக் கூறினால், அமெரிக்கத் தாய்மார்கள் கேட்பதேயில்லை. குழந்தைகள் அப்படித் தனியாகப் படுத்தால்தான் **independent and self reliant**-ஆக இருப்பார்கள் என்று வாதம் செய்கிறார்கள். நம் நாட்டில் பெற்றோர்கள் பிள்ளைகளின் படிப்புச் செலவு மற்றும் பெண்களின் திருமணச் செலவு ஆகியவற்றுக்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள். மெடிக்கல் காலேஜில் பையனைச் சேர்க்க நாற்பது, ஐம்பது லட்சம் செலவாகும் என்று தெரிந்தால், அதற்கெல்லாம் பெற்றோர் இங்கே தங்களுக்குள்ள வீடு, நிலத்தை விற்பதை பார்க்கின்றோம். ஆனால் அமெரிக்கப் பெற்றோர்கள் இப்படிப்-பட்ட பெரிய செலவுகள் செய்வதில்லை. பிள்ளைகளே **education loan** போட்டு அது கிடைத்தால், அதை வைத்துக் கொண்டு அவர்கள் படித்துக் கொள்ள வேண்டியதுதான். மற்ற-படி **non-professional course**-ல் சேருவதாக இருந்தால், பெரும்-பாலான பிள்ளைகள் மாலை நேரங்களில் ஹோட்டல் வெய்ட்டர், கடைகளில் சேல்ஸ்மென், பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் போடுபவர், நியூஸ் பேப்பர் போடுபவர் என்று சில்லறை **part time** வேலைகளில் சேர்ந்து அதில் கிடைக்கும்

வருமானத்தைக் கல்லூரிப் படிப்புச் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இப்படி 18 வயதிலேயே வீட்டைவிட்டு வெளியேறி சொந்தக் காலில் நிற்க வேண்டிய நிலை வரும்போது பிள்ளைகளுக்குக் குடும்பப் பாசம் என்பது இல்லாமல் போகிறது. நம் நாட்டில் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கப் பெற்றோர்கள் படாதபாடு படுவதாகத் தெரிகிறது. திருமணச் செலவிற்காக வீட்டையே விற்கும் பெற்றோர்கள் பலர் உள்ளனர். தீபாவளி, பொங்கல் சீர் என்று கூடுதல் சீர் செய்யப் பெற்றோர்கள் சிரமப்படுவதைப் பார்க்கலாம். ஆனால் அமெரிக்கப் பெற்றோர்கள் இப்படிச் சிரமப்படுவதே இல்லை. Church-க்கு அழைத்துச் சென்று திருமணம் செய்து வைத்து, அதிகமாக ஒரு lunch வழங்குவார்கள். வசதியான பெற்றோராக இருந்தால், மேற்கொண்டு தன்னுடைய பெண்ணிற்காக நகையெல்லாம் செய்து போடுவார்கள். அவ்வாறு வசதி இல்லாத பெற்றோராக இருந்தால், போடாமலும் விட்டுவிடுவார்கள். அவர்கள் போட்டுதான் ஆகவேண்டும் என்று மணமகன் வீட்டார் கட்டாயப்படுத்த முடியாது. இப்படிப் பெற்றோர் பிள்ளைகளுக்குப் பெரிதாக ஒன்றும் செய்வதில்லை என்ற நிலை உள்ளபோது, அந்தளவிற்கு அவர்களுக்கு அதிகாரமும் குறைந்து போகிறது. இங்கே கல்யாணச் செலவிற்கு முழுப் பொறுப்பு பெற்றோர்கள் ஏற்பதால், மகள் யாரைக் கல்யாணம் செய்யவேண்டும் என்பதில் முழு அதிகாரத்தைப் பெற்றோர்களே செலுத்துகிறார்கள். பெற்றோர்களின் அதிகாரத்திற்குப் பெண்களும் பயந்து பெரும்பாலும் பெற்றோர் விருப்பத்தையே பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அமெரிக்காவில் நிலைமை வேறுமாதிரியுள்ளது. அங்கே பெண் தனக்கேற்றவரைத் தானே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்கிறாள். இதனால் வேறு community-யைச் சேர்ந்த ஆண் மகனைத் தேர்ந்தெடுத்தாலும், பெற்றோர் பெரிதாக ஆட்சேபணை தெரிவிக்க தகுந்த ஆதாரமில்லாமல் போய்விடுகிறது. எங்களுக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லலாமே தவிர திருமணத்தைத் தடுத்து நிறுத்த அவர்களால் முடிவதில்லை. பல ஆண்பிள்ளைகள் அவர்கள் ஒரு பெண்ணைப்



பார்த்து திருமணம் செய்து கொண்டு தந்தையாரைப் போனில் அழைத்து, Dad நான் திருமணம் செய்துகொண்டு விட்டேன். இதை நான் உங்களுக்கு தெரிவிக்க வேண்டிய கடமை என்பதால் தெரிவிக்கிறேன் என்று சொல்லி விட்டுப் பதிலுக்கு அவர் என்ன சொல்வார் என்றுகூட காத்திருக்காமல், லைனை கட் பண்ணிவிடுவார்கள்.

ஆக நம் நாட்டில் பெற்றோர்களுக்குப் பிள்ளைகள்மேல் பாசமுள்ளது. பாசத்தின் காரணமாகப் பொறுப்புமுள்ளது. பாசம், பொறுப்பு இரண்டும் அதிகமாக உள்ளதால், பிள்ளைகளின் வாழ்க்கையின் பேரில் அளவுகடந்த அதிகாரமும் வந்துவிடுகிறது. அங்கே பாசம் குறைவு, அதேசமயத்தில் சுதந்திரம் அதிகம். இது நமக்குக் குறையாகத் தெரிகிறது. பாசமும், அதிகாரமும் நிறைந்த இந்தியப் பெற்றோர் சிறந்தவரா? அல்லது பாசம் குறைந்து, சுதந்திரம் அதிகமளிக்கும் அமெரிக்கப் பெற்றோர் சிறந்தவரா? என்று முடிவு செய்வது கடினம். வயதான பெற்றோர்களை வளர்ந்த பிள்ளைகள் வைத்துப் பார்த்துக்கொள்வதை நாம் குடும்பப் பாசத்தின் உச்சகட்டமாக எடுத்துக் கொள்கிறோம். சிறந்த குடும்பப் பண்பின் அடையாளமாகவும் நாம் எடுத்துக் கொள்கிறோம். ஆனால், அமெரிக்காவில் இதைக் காண்பதே அரிது. இங்கே வயதானவர்களுக்கு முறையாக பென்ஷன் கிடையாது. Medical Insurance-உம் கிடையாது. அதனால் வயதானவர்களை இளம் பிள்ளைகள் பார்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் அங்கே இப்படியில்லை. வேலை செய்து ஓய்வு பெறுபவர் எல்லோருக்குமே social security pension உண்டு. உடம்பிற்கு வந்தால் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். இப்படி வருமானத்திற்கு வருமானம், மருத்துவ சிகிச்சைக்கு Medical Insurance என்றிருக்கும்போது கூடவே மற்றவர்கள் இருந்து பார்த்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லாமல் போகிறது. இப்படி பொருளாதாரக் காரணங்களைக்காட்டி அமெரிக்கர்கள் வயதான பெற்றோர்களைக்கூட வைத்துக் கொள்ள பிரியப்படுவதில்லை. பெற்றோர்களும் பிள்ளைகளின் privacy-யில் குறுக்கிடுவதாக நினைத்து பிள்ளைகளுடன் சென்று வாழத் தயக்கம்

காட்டுகிறார்கள். பொருளாதாரக் காரணங்கள் ஒருபுறமிருந்தாலும் நம் நாட்டில் அது ஒன்று மட்டுமே காரணம் என்று எடுத்துக் கொள்ள முடியாது. வயதானவர்களைத் தனிமை வாட்டும். பிள்ளைகள் பேரக்குழந்தைகளெல்லாம் சேர்ந்திருந்தால், இந்தத் தனிமை உணர்வு வெகுவாகக் குறையும். பேரக்குழந்தைகளும் தாத்தா, பாட்டியின் **companionship**-ஐ அனுபவித்து மகிழ்வார்கள். ஆகவே நம் நாட்டில் பொருளாதாரக் காரணங்களைக் காட்டிலும் குடும்பப் பாசம்தான் வயதானவர்களைப் பிள்ளைகளுடன் தங்க வைக்கிறது என்று நாம் சொல்லலாம்.

அடுத்ததாக குடும்பப் பாசத்திற்கு அடிப்படையாக இருப்பது கணவன் மனைவியிடையே இருக்கும் நெருக்கமான உறவுகள். கணவன் என்று ஒருவன் அமைந்துவிட்டால் கடைசிவரை அவன் தன்னுடன் இருப்பான் என்ற உணர்வு மனைவிக்குக் கிடைத்தால், அந்தப் பெண்மணி மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறாள். இதே உணர்வு கணவனாக இருப்பவருக்கும் கிடைக்கிறது. இந்தியத் திருமண உறவுகளில் உள்ள இந்தப் பாதுகாப்பு அமெரிக்கத் திருமண உறவுகளில் இல்லை. இதற்குக் காரணமும் இருக்கிறது. இந்தியாவில் பெண்கள் கணவருக்கு அடங்கியிருக்க வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்கின்றனர். அவருடைய செயல்பாடுகள் பிடிக்கிறதோ இல்லையோ அவற்றை நாம் ஆட்சேபிக்கக் கூடாது, மறுத்துப் பேசக் கூடாது என்று பெண்கள் அடங்கிப் போவதால், கணவன் மனைவியிடையே உள்ள சுமுகம் நீடிக்கிறது. தனக்குப் பிடிக்காததை கணவன் செய்யும்போது அதைக் கேள்விக் கேட்காமல் மனைவி இருக்கும்போது அந்த இடத்தில் கணவனுடைய பாசம் வலுப்பெறுகிறது. இந்த இடம் அமெரிக்கக் கணவன், மனைவி உறவில் இல்லை. இந்தியப் பெண்கள்போல் அமெரிக்கப் பெண்கள் கணவர்களுக்கு அடங்கியிருக்க வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் தங்களைக் கணவர்களுக்குச் சரிசமமாக நினைக்கிறார்கள். அவர் எல்லாவற்றையும் தன்னிடம் சொல்ல வேண்டும், அவர் என்ன செய்கிறார், எங்கே போகிறார், யாருடனெல்லாம் உறவாடுகிறார் என்று எல்லாம் தனக்குத் தெரிந்தாக வேண்டும்



என்று நினைக்கிறார். அவர்களுக்குப் பிடிக்காத ஏதேனும் ஒன்றைச் செய்து விட்டால், கறாராகக் கேள்வி கேட்பார்கள். வழக்கமாக 8 மணிக்குள் வீட்டிற்கு வருபவர் ஒருநாள் பத்து மணிக்கு வந்தால், பொதுவாக கடன் கொடுக்காதவர் உறவினர்கள் யாருக்காவது கொடுத்தால், மனைவிக்குப் பிடிக்காதவர் வீட்டிற்கு வந்தால், அவருக்குப் பிடிக்காத செலவு செய்தால், அமெரிக்க மனைவிகள் உடனே கேள்விகள் கேட்பார்கள். இந்தக் கேள்விகளுக்குப் பதில்கூற கணவர்கள் மறுக்கும்போது அங்கே உறவு கசந்து போகிறது. இப்படி அடுத்தவர்களுக்கு விட்டுக் கொடுக்க முடியாத இடம் திருமண வாழ்வில் வந்துவிடும்பொழுது நாளாவட்டத்தில் உறவு கசந்துபோய் மண வாழ்க்கையில் முறிவு ஏற்பட்டுப் போகிறது.

இப்படித் திருமண உறவு முறிந்துபோகும் குடும்பங்களில் பிறந்து வளர்கின்ற குழந்தைகள் மனநலம் கெட்டு சமூக விரோதிகளாக மாறுகிறார்கள். திருட்டு, கொலை, கொள்ளை என்றிவற்றில் ஈடுபடுபவர்களையெல்லாம் பார்த்தால், இவர்கள் எல்லோருடைய பின்னணியிலும் உடைந்த குடும்பங்கள், கணவனால் கைவிடப்பட்ட மனைவிமார்கள், குடிபோதையில் குடும்பத்தைச் சீரழித்த தகப்பனார்கள் என்றுதானிருக்கும். அங்கிருந்து இந்தியாவிற்கு வருகின்ற அமெரிக்கர்கள் இந்தியர்களின் பாசமயமான குடும்ப வாழ்க்கையைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். கணவன் வீடுகளுக்கு வரும்வரையிலும் காத்திருந்து, உணவு பரிமாறிவிட்டு, பிறகு தான் உண்ணும் மனைவி, தனக்குப் பிடித்த **subject**-ஐ விட்டுவிட்டு தகப்பனாருக்குப் பிடித்த **subject**-ஐ எடுத்துக் கொள்ளும் மகன், சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் பெற்றோரிடம் கொடுத்துவிட்டு வெறும் ரூ.500, ரூ.1000 என்று தனது பாக்கெட் செலவிற்கு வைத்துக் கொள்ளும் மகள், உடம்பு முடியாமல் படுத்துவிட்ட பெற்றோருக்கு எல்லாவிதமான பணிவிடைகளையும் செய்து காலத்தைப் போக்கும் பிள்ளைகள் என்றிவைகளையெல்லாம் நேரில் பார்க்கும் அமெரிக்கர் இப்படிப்பட்ட குடும்ப வாழ்க்கை எப்படிச் சாத்தியம்? இம்மாதிரி எங்கள் நாட்டில் அமைந்தால், எவ்வளவோ சிறப்பாக இருக்குமே என்று வியந்து பாராட்டுகிறார்கள். ஒருபக்கம் அதிக சுதந்திரத்தைக்

கேட்கிறார்கள். மற்றொரு பக்கம் பாசமான குடும்ப வாழ்வை எதிர்பார்க்கிறார்கள். சுதந்திரத்தை ஓரளவு தியாகம் செய்தால்-தான் குடும்ப வாழ்வு சிறக்கும் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. எந்த அமெரிக்கப் பெண்மணியும் கணவன் வீட்டிற்கு வருவது தாமதமானால், அவருக்காகக் காத்திருக்க முன்வருவதில்லை. தனக்குப் பசி வந்தால், உடனே சாப்பிடுவேன் என்ற அந்தச் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காமல், பாசமான குடும்ப உறவுகள் வேண்டும் என்று கேட்டால், இக்கேள்வியே முரண்பாடாக அமைகிறது.

**௪. அமெரிக்க நாடு உலகில் நிலவும் பயங்கரவாதத்தை அழிக்க விரும்புகிறது. இருந்தாலும், அந்த நாட்டிலேயே நிலவும் துப்பாக்கிக் கலாச்சாரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுகிறது:**

உலக பயங்கரவாதத்தை ஒழிக்க அமெரிக்கா எடுக்கும் முயற்சிகள் எப்படி இருக்கிறது என்றால், தன்னுடைய பிள்ளைகள் தறுதலையாக இருக்கும்போது அடுத்த வீட்டுப் பிள்ளைகள் எப்படி இருக்க வேண்டும் என்று புத்திமதி சொல்லும் குடும்பத் தலைவர்போல் உள்ளது. ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகப்-படுவதாகச் சொல்லிக்கொண்டு பத்து வருடங்களுக்கு முன்னால் அமெரிக்கா தாக்குதல் நடத்திப் பெருவெற்றி பெற்றது. இருந்தாலும், பேரழிவிற்கான ஆயுதங்கள் அங்கே எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. **WTC Towers** விமானத் தாக்குதலால் தகர்க்கப்பட்டபோது, அது ஆப்கானிஸ்தானில் பதுங்கியிருக்கும் அல்கொய்தா தீவிரவாதிகளின் வேலை என்று முடிவு செய்து பத்து வருடங்களாகப் பல்லாயிரம் கோடிகளை செலவு செய்து, ஆப்கானிஸ்தானில் நிலவும் தீவிரவாதத்தை ஒடுக்கியது. இவ்வளவு செலவு செய்தாலும், தீவிரவாத பீதியிலிருந்து அமெரிக்கா விடுபட்டதாகத் தெரியவில்லை. இம்மாதிரியான நிலைமைக்குத் தீர்வாக ஸ்ரீ கர்மயோகி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், சொந்த நாட்டில் நிலவும் துப்பாக்கிக் கலாச்சாரத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்தாலன்றி, அமெரிக்காவின் தீவிரவாத முயற்சி வெற்றி பெறாது என்கிறார்.



துப்பாக்கிக் கலாச்சாரம் ஏன் அங்கு நிலவுகிறது என்பதை நாம் முதலில் அறியவேண்டும். ஆரம்பத்தில் வனாந்திரமாக அமெரிக்கா இருந்தபோது அங்குக் குடியேறியவர்கள் செவ்விந்-தியர்களிடமிருந்தும், வனவிலங்குகளிடமிருந்தும் கொள்ளை முயற்சிகளில் ஈடுபடும் ரௌடிகளிடமிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வனாந்திரத்தில் துப்பாக்கிகளை வைத்துக் கொண்டார்கள். வனாந்திரத்தில் போலீஸ் ஸ்டேஷன் நிறுவ-முடியாது என்ற சிரமமும் இருந்தது. எனவே அரசாங்கமே பொதுமக்கள் தன்னுடைய உயிரையும் உடமையையும் அவரவரே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்-பார்த்தது. ஆனால் அமெரிக்கக் கலாச்சாரம் நாகரீகமடைந்து, வனாந்திரங்களெல்லாம் மறைந்து சட்டம், ஒழுங்கு, போலீஸ் பாதுகாப்பு இவை எல்லாம் வந்தபிறகும் அமெரிக்க மக்கள் துப்பாக்கிக் கலாச்சாரத்தை விட மறுக்கிறார்கள். இந்த இடம்தான் புரியாத புதிராக உள்ளது. ஸ்ரீ கர்மயோகி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், அமெரிக்கா நாகரீகமடைந்த நாடாகி விட்டபோதும், பழைய வனாந்திர பழக்கவழக்கங்களை அவர்களால் விட முடியவில்லை. அவர்களுக்குக் காவல் துறை மேலோ, சட்டம் ஒழுங்கு மேலோ இன்னமும் நம்பிக்கை வரவில்லை. அவர்கள் நம்பிக்கையெல்லாம் அவர்கள் கையில் வைத்துள்ள துப்பாக்கி மேல்தான் உள்ளது என்கிறார். இப்படித் துப்பாக்கிமேல் வைத்துள்ள நம்பிக்கையை அவர்கள் விடாமல், அங்கே நிலவும் வன்முறையையோ அல்லது வெளிநாடுகளி-லிருந்து வரும் தீவிரவாத தாக்குதல்களையோ ஒழிக்க முடியாது என்கிறார்.

இருந்தாலும், அம்மக்கள் வன்முறையிலிருந்தும், தீவிர-வாதத்திலிருந்தும் விடுதலை வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள். பிரச்சனை என்னவென்றால் அமெரிக்க மக்களிடமுள்ள உண்மை அமெரிக்க அரசிடமில்லை. அணுகுண்டுகள் ஆபத்தானவை, அவைகளை வைத்திருப்பது நல்லதல்ல என்று பொதுவாக அமெரிக்க மக்கள் நினைக்கலாம். ஆனால் அமெரிக்க அரசாங்கம் அணுகுண்டுகளை விடுவதாக இல்லை. மாறாக, அணுகுண்டுகளை வைத்திருப்பதைப் பெருமையாக நினைக்கிறது. பேரழிவிற்கு வழி செய்யும்

அணுகுண்டுகளை விடமாட்டேன் என்று சொல்லும் ஒரு நாடு எப்படித் தன் நாட்டில் வன்முறை தலையெடுக்காமல் தடுக்க முடியும்? அணுகுண்டுகளை அழிக்காமல் வைத்திருப்போம் என்று சொல்வதே தவறு. அந்தத் தவற்றை செய்கின்ற அமெரிக்க நாடு அதோடு நிற்காமல் அணு ஆயுதங்களை வைத்திருக்காத மற்ற நாடுகளையெல்லாம் மிரட்டி 'உங்களுக்கு அணுசக்தி மின் நிலையம் வேண்டுமென்றால், அணுகுண்டு தயாரிக்க மாட்டோம்' என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்-திட்டால்தான் நாங்கள் அணுசக்தி **technology**-யைக் கொடுப்போம் என்று கட்டாயப்படுத்துகிறது. இம்மாதிரி மிரட்டும்போது ஒரு போலித்தனம் வெளிப்படுகிறது. அதாவது நாங்கள் அணுகுண்டுகள் வைத்திருக்கலாம். ஆனால் நீங்கள் வைத்திருக்கக் கூடாது என்று சொல்வதுபோலுள்ளது. சில நாடுகள் வெளிப்படையாக இப்படி அமெரிக்க அரசாங்கத்தைக் கேள்விகள் கேட்கின்றன. உதாரணமாக, ஈரான் அணுகுண்டு தயாரித்ததை அமெரிக்கா கண்டித்தபோது ஈரானிய அதிபர் இப்படித்தான் எதிர்கேள்விக் கேட்டார். அப்படிக் கேள்வி கேட்பது அமெரிக்காவிற்குப் பிடிக்கவில்லை எனும்போது இது அந்நாட்டினுடைய **insincerity**-யைக் காண்பிக்கிறது. **Insincerity** இந்த இடத்தில் மட்டும் வெளிப்பட்டு அத்துடன் நின்று-விடுவதில்லை. மற்றும் பல இடங்களிலும் வெளிப்படச் செய்கிறது. உதாரணமாக அமெரிக்கா ஒரு ஜனநாயகக் குடியரசு. நியாயமாகப் பார்த்தால், உலகின் மற்ற நாடுகளில் ஜனநாயகக் குடியரசு அமைய அமெரிக்கா ஆதரவளிக்க வேண்டும். ஆனால் அமெரிக்கா இதற்கு நேரெதிர் மாறான காரியத்தைத்தான் செய்கிறது. அமெரிக்காவிற்குக் கம்யூனிசத்தை ஆதரிக்கும் நாடுகள் நேரெதிரிகளாவார்கள். ஆகவே கம்யூனிசம் நிலவும் நாடுகளிலெல்லாம் அவ்வாட்சியைக் கவிழ்க்க அமெரிக்கா முயற்சி எடுக்கும். கம்யூனிசத்தைக் கவிழ்க்கும் முயற்சியில் ராணுவ ஆட்சி வந்தாலும் பரவாயில்லை என்று அமெரிக்கா உள்ளது. ஜனநாயகத்தை ஆதரிக்கும் அமெரிக்கா போன்ற-தொரு நாடு மற்ற நாடுகளில் ராணுவ ஆட்சி வர உதவி செய்வது என்ன நியாயம்? நேருவும் இந்திராவும் நம் நாட்டின் பிரதமராக இருந்தபோது சோவியத் யூனியனுடன் இந்தியா



நட்புறவு கொண்டிருந்தது. இது அமெரிக்காவிற்குப் பிடிக்க-வில்லை. இதன் காரணமாக, 1965-லும் சரி 1971-லும் சரி, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர் வந்த-போது அமெரிக்கா வெளிப்படையாக, பாகிஸ்தானைத்தான் ஆதரித்தது. இம்மாதிரியே இஸ்ரேல் பாலஸ்தீனர்களின் உறவில் எப்போது பிரச்சனை வந்தாலும், இஸ்ரேல் செய்யும் தவறுகளைக் கண்டுகொள்ளாமல் பாலஸ்தீனர்கள்தான் தவறு செய்கிறார்கள் என்பதுபோல் ஐ.நா பொதுச் சபையில் அமெரிக்கா பேசுகிறது. இதனால் பெரும் கோபமடைந்து அல்கொய்தா தீவிரவாதிகள் அமெரிக்காவினுள் நுழைந்து, விமானங்களைக் கடத்தி, உலக வர்த்தக மைய கட்டடங்கள் இரண்டை விமானங்களை வைத்தே மோதி தகர்த்து, அமெரிக்காவையே பயங்கரவாத பீதியில் ஆழ்த்தினார்கள். இப்படியாக, அமெரிக்காவில் அமைதி நிலவ வேண்டு-மென்றால், அதற்கு எதிரான காரியங்களை அந்நாடே செய்து-கொண்டுள்ளது என்பது அந்நாட்டின் அறிவின்மையைக் காட்டுகிறது. அதாவது மக்களைத் துப்பாக்கி வைத்துக் கொள்ள பரவலாக அனுமதிப்பது, அணு ஆயுதங்களைக் கைவிட மறுப்பது, கம்யூனிசத்தை அழிப்பதாக நினைத்துக் கொண்டு ராணுவ ஆட்சியை ஆதரிப்பது, அமைதி விரும்பும் நாடான இந்தியாவைக் கைவிட்டு, வன்முறையை விரும்பும் பாகிஸ்தானை ஆதரிப்பது, இஸ்ரேலின் குறைபாடுகளைக் கண்டுகொள்ளாமல், அந்நாட்டையே ஆதரித்து, மற்ற முஸ்லீம் நாடுகளின் பகையைச் சம்பாதிப்பது போன்ற காரியங்களில் தொடர்ந்து ஈடுபடும் வரையில் அமெரிக்காவில் அமைதி நிலவுவது கடினம். என்று இந்தத் தவறுகளையெல்லாம் அந்த அரசு உணர்ந்து, கைவிட்டு மனம் மாறுகிறதோ அன்றிலிருந்து-தான் அந்நாட்டிற்கு உண்மையாக பயங்கரவாதத்திலிருந்து விடுதலை கிடைக்கும். அமெரிக்க அரசு மாறுமா மாறாதா என்று நாம் சொல்வதற்கில்லை. ஆனால் மாறினால் நல்லது என்பதை மட்டும் சொல்ல முடியும்.

முற்றும்.

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

**25. கடமையில் ஆர்வம் காண்பிக்க வேண்டும்:**

கடமைகளைச் செய்பவன் சிறப்பான மனிதன். அவர்கள் குறைவு. கடமைகளைச் செய்பவர்கள் அவற்றை ஏற்றுக்கொண்டு செய்கிறார்கள். மாணவனுக்கு விளையாட ஆசை; அவனது கடமை படிப்பு. படிப்பின் அவசியத்தால் விளையாட்டை விட்டு, படிப்பை ஏற்றுக்கொண்டு படிக்கிறான். இதுவே சிறப்பு. ஆனால் அன்னை சொல்வது விளையாட்டில் உள்ள ஆர்வம் படிப்பில் இருக்க வேண்டும் என்பது. கூர்ந்து கவனித்தால் இது அசாத்தியமான காரியம். சொல்லப் போனால் மனித சுபாவத்தில் இல்லாத ஒன்று.

கசப்பான கடமைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை பெரியது. அந்தக் கடமைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காண்பிப்பது மனித மனத்தில் இன்றில்லாத சிறப்பு. இந்தச் சிறப்புக்கு ஒருவன் தன்னைப் பாத்திரமாக்கிக்கொண்டால், அவன் மனிதனை விடவும், தேவரை விடவும் உயர்ந்தவன் ஆகிறான்.

ஒவ்வொரு கடமையை நிறைவேற்றுவதிலும் முழு ஆர்வம் உடையவன் வாழ்வு உயர்ந்தது. அது யோக வாழ்வாகும். அவனுடைய வாழ்வில் அன்னை பூரணமாகப் பரிமளிக்க முடியும். அன்னையின் அநேக விதிகளில் இது ஒன்றே-யானாலும், முழுமையாகப் பின்பற்றினால் அன்னையின் முழு வெளிப்பாடும் அவனுடைய வாழ்வில் ஏற்படும்.

**26. புரளி பேசாதிருத்தல்: *சில்லறையான பழக்கங்களை ஒதுக்குதல்:***

அன்னையை ஏற்றுக்கொள்பவர்கள் பொதுவாகச் சிறப்பான குணங்களையுடையவர்களாக இருப்பார்கள். சில சமயங்களில் உயர்ந்த பக்தியும், சின்ன புத்தியும் சேர்ந்து காணப்படுவதுண்டு. பக்தியின் உயர்வால் அன்னையிடம் வந்துவிடுகிறார்கள்.



பழக்கத்தை விட முடிவதில்லை. இந்தப் பழக்கம் உடையவர்களுக்கு மட்டுமே இம்முறை பலன் அளிக்கும். தணிவான பேச்சை ஏற்றுக் கொள்ளுதல், தியானம் பழகுதல் எவ்வளவு கடினமோ, அந்த அளவு இப்பழக்கங்களை விடுதல் கடினம். அந்தக் கடினமான முயற்சியை மேற்கொள்வதால்தான் உயர்ந்த பலன் கிடைக்கிறது. இம்முறையில் முழுப் பலன் கிடைக்க வேண்டுமானால் இப்பழக்கங்களை விட்டு விடுவதுடன், இவற்றின்மீது மனதில் உள்ள ஆசையையும் முழுவதுமாக நீக்க வேண்டும்.

**27. ஒவ்வொரு நாளும் அன்னையை நோக்கி ஓர் அடியெடுத்து வைக்க வேண்டும்:**

இதுவரை சொல்லிய முறைகளில் எல்லாவற்றையும்விட இது கடுமையானது. சாதாரண அமெரிக்கர் ஒருவர் **Larry Apply** என்று பெயருடையவர், நூறு கோடி ரூபாய் செலாவணி உள்ள கம்பெனியின் தலைவராக வந்தார். படிப்படியாக அவரது வாழ்வில் முன்னேற்றம் அடைந்து, எளிமையான நிலையிலிருந்து உயர்வுக்கு எட்டினார். இவர் ‘‘தினமும் ஏதாவது புதியதாக ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும்’’ என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார். தம் தொழில் சம்பந்தப்பட்ட ஒரு நுணுக்கத்தை அவசியமாக அன்றாடம் அவர் கற்றுக்கொள்வார். இரவு தூங்கப் போகும்முன் இன்று எதைக் கற்றுக்கொண்டோம் எனத் தம்மையே கேட்டுக்-கொள்வார். ஒரு நாள் தம்மால் எதையும் கற்றுக்கொள்ள முடியவில்லை என்று அறிந்து, அன்று அவரால் தூங்க முடியவில்லை. அகராதியை **(dictionary)** எடுத்துத் தமக்குப் புதிய சொல் ஒன்றைக் கற்றுக் கொண்டார். அதன் பின்னரே அவரால் தூங்க முடிந்தது. இது ஒரு அற்புதமான கொள்கை.

அன்னையிடம் வந்தபின் ஆயுளில் ஒருமுறை அன்னையை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தால் அது தவம் பலித்ததற்கு நிகராகும். தினமும் ஏதாவது ஒரு விஷயத்தில் செய்வதெப்படி? கடினம்தான். அந்தக் கடினமான முறையைக் கைக்கொண்டு

பலன் அடைய வேண்டும் என்பதே கொள்கை. இதிலும் ஒரு சிறப்பு; மனம் பக்குவம் அடைந்து இக்கொள்கையை ஏற்றுக்கொண்டால், அன்னை கடினமான முறையையும், சந்தோஷமான முறையாக மாற்றிக் கொடுப்பார். பின்னர் ஒவ்வொரு செயலிலும் எப்படி அன்னையை நோக்கி முன்னேறுவது என்பதை அன்னையே புரிய வைக்கிறார். வாழ்வின் கூறுகள் ஆயிரம். ஒவ்வொரு செயலுக்கும் நூறு பகுதிகள் உள்ளன. ஒரு பகுதியிலாயினும் நாம் அங்கு ஒரு முன்னேற்றத்தைக் காண முடியும். இதை ஏற்றுக்கொண்டவர்கள் இல்லை. ஆனால் ஒருவர் ஏற்றுக்கொண்டால், இதுபோன்ற புதுமை இல்லை என்பதை அவர் காண்பார். அன்னையின் சிறப்பான பார்வைக்குரியவராவார் அவர்.

**28. நன்றியறிதல்:**

நன்றியுணர்வு மனிதனுடைய பண்புகளில் சிறந்த ஒன்று. இதன் சிறப்பு மென்மை. மிருதுவான குணமும், மென்மையான சுபாவமும் உடையவர்களுக்கு இயல்பாக அமைவது நன்றியுணர்வு. நன்றி என்று பொதுவாக நாம் அறிந்தது பிறர் செய்த உதவிக்குப் பிரதியாக நம்முள் எழும் நல்ல எண்ணமே. பெற்ற உதவிக்குப் பலனாக மனம் கனிந்து இனிப்பதையே நன்றியுணர்வு என்று நாம் சொல்கிறோம். மேலைநாட்டில் **thank you** என்று சொல்வது போன்ற பழக்கம் நம் நாட்டில் இல்லை. அதற்கொத்த சொல்லும் தமிழில் எழவில்லை. சொல்லால் நம் நன்றியைத் தெரிவிக்கும் பழக்கம் நம் நாட்டில் இல்லை. ஒருவர் நமக்கு நல்லது செய்தால் நம் உள்ளம் தழுதழுத்துப்போகிறது. உணர்ச்சி மூலமே நன்றியைத் தெரிவிப்பது நம் இயல்பு.

நன்றியுணர்வு என அன்னை குறிப்பிடுவது ஒரு பெரிய கருத்து. நாமறிந்த நன்றி அதனுள் ஒரு பகுதியாகும். இவ்வுணர்வு பூவுலகத்திற்குப் புதியது என்றும் அன்னை கூறுகிறார். ஒவ்வொரு குணத்திற்கும் ஒரு தெய்வம் இருப்பதைப் போல் நன்றிக்கும் ஒரு தெய்வம் உண்டு என்கிறார் அன்னை **(Goddess of gratitude)**. அன்னை தாம் கண்ட காட்சி **(vision)** ஒன்றில் பல தெய்வங்கள் கலந்துகொண்டதாகவும், ஓர்



இளந்தெய்வம் வெண்ணிறமாகக் காணப்பட்டதாகவும், அவரை அடையாளம் புரியாமல், ‘‘நீங்கள் யார்?’’ என்று கேட்டதற்கு, ‘‘நான் புதியதாகப் பூமியில் உதித்த நன்றி என்ற தெய்வம்’’ எனச் சொல்லியதாகவும் கூறுகிறார்.

நிகழும் நிகழ்ச்சிகளின் பின்னணியில் இறைவனின் சக்தி செயல்படுவதை அறிந்துணர்வதையே நன்றியுணர்வு என்று அன்னை குறிப்பிடுகிறார். பொதுவாக நாம் எல்லா நிகழ்ச்சி-களையும் தாமே நடப்பவை என்று கொள்கிறோம். சிறப்பாக நடப்பனவற்றையே நாம் கூர்ந்து கவனிக்கின்றோம். இயல்பாக நடக்காத ஒன்றை, ஒருவர் நடத்திக் கொடுத்தால் நாம் அதைக் குறிப்பாக உணர்கிறோம். நன்றிக்கு உரிய செயலாக அதை நாம் கருதுகிறோம். அன்னசத்திரம் கட்டுதல், ஏழைக்கு எழுத்தறிவித்தல் போன்ற செயல்களை நாம் நம் நன்றிக்கு உரியவை எனக் கொள்கிறோம். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று உணர்ந்தவருக்கு ஒவ்வோர் அசைவும் நம் நன்றிக்குரியது எனத் தெரிகிறது. தம் அறைக்கு வெளியேயுள்ள தென்னை மரத்தில் பாளை வெடித்துப் பூ மலர்வதைத் தாம் வியந்து கூர்ந்து கவனித்து இறைவனுக்கு நன்றி தெரிவித்ததை அன்னை குறிப்பிட்டுள்ளார். தாம் பிரான்சிலிருக்கும்பொழுது, குழந்தைகள் தெருவில் ஆர்ப்பரித்து விளையாடியதைப் பார்த்து மெய்சிலிர்த்து இறைவனுக்கு நன்றி தெரிவித்ததை அன்னை கூறியிருக்கின்றார். புற நிகழ்ச்சிகளில் இறைவனைக் கண்டு, தாம் அவனைக் கண்டதால் புளகாங்கிதம் அடைவதை அன்னை நன்றியுணர்வு என விளக்கம் அளிக்கின்றார்.

நன்றி என்பது அன்பு என்பதைப் போல் உயர்ந்த குணம். இவற்றை உணரும் தன்மை மனிதனின் உயர்ந்த பகுதியான ஆத்மாவுக்கே உரியது. உடலுக்கும், வெற்று உணர்வுக்கும், சாதாரண அறிவுக்கும் அத்திறன் இல்லை. அன்னை நன்றியை மனிதன் உணரும் பகுதி **(psychic being)** சைத்தியபுருஷன், ஹிருதயத்திற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் கட்டைவிரல் பிரமாணமுள்ள ஆன்மா என்கிறார். தெளிவாகச் சொல்வதாக இருந்தால், அதை ஆன்மாவின் பிரதிநிதி என்கிறார். அந்த ஆன்மா விழிப்பாக உள்ளவர்களுக்கே நன்றியுணர்வு உண்டு.

நன்றி உணர்வை வளர்த்துக்கொண்டால், ஆன்மா விழிப்-படையும். குழந்தைப் பருவத்தில் ஆன்மா விழிப்பாக இருக்கின்றது என்ற மரபை விளக்கும் வகையில் உள்ளது, ''குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்'' என்ற பழமொழி. தெய்வத்தன்மை குழந்தைக்கு உண்டு என்பது நம் மரபு.

அன்பர் வழிபாட்டில் நன்றியுணர்வு எந்த இடம் பெறுகிறது? வழிபாடு என்பது பல வகையின. பரம்பரையிலிருந்து விலகியுள்ள பூரணயோகத்தில் வழிபாட்டுக்குகந்த முறைகளை இக்கட்டுரையில் சொல்லி வருகிறேன். நன்றியுணர்வு வழிபாட்டில் எப்படி வரும் என்பது ஐயம்.

நன்றியுணர்வை நாம் வலியுறுத்தும்பொழுது (சைத்திய புருஷன்) ஆன்மா விழிப்படைந்து செயல்படுகிறது. ஆன்மா அசைந்து தன் செயலை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதே ஆன்மீக வழிபாடு. எனவே ஒவ்வொரு செயலிலும் நாம் இறைவனுக்கு நன்றி கலந்த சமர்ப்பணம் செய்தால், வெற்று மனித வழிபாடு ஆன்ம வழிபாடாக மாறி உயருகிறது. இதுவே அடிப்படை.

மேலும் சொல்லப்போனால், வழிபாட்டையும் கடந்து நன்றி உணர்வு நம் வாழ்க்கைக்கு உறுதுணையான கருவியாகவும் பயன்படக்கூடும். அத்திறனும் அதற்குண்டு. ஒரு வகையாகப் பார்த்தால், மனிதன் நல்லுணர்வோடு வாழும்போது அவன் வாழ்க்கை ஆற்றொழுக்காக, இடையூறின்றி, பிரச்சனையின்றி, தங்குதடையின்றி, மேலும் மேலும் வளர்ந்து பெருகிச் செல்கிறது. நல்லுணர்வு குன்றி, நன்றியுணர்வை மறந்து, மற்ற உணர்வு மேலிடும் பொழுது பிரச்சனைகள் தோன்றுகின்றன. மற்ற உணர்வை வலியுறுத்தினால், மனம் கடுமையடைந்தால் பிரச்சனைகள் வலுக்கின்றன. எனவே பிரச்சனைகளை அழிக்க மனிதன் கடுமையான உணர்வை விட்டொழித்து, நன்றி போன்ற நல்லுணர்வை வளர்த்துக்கொண்டால் போதும் எனவும் சொல்லலாம்.

உதாரணமாக, செவ்வையாக நடக்கும் ஒரு காரியம் திடீரெனத் தடைப்பட்டால், அன்பர் ஒரு கணம் நிதானித்து



அக்காரியத்தின் பகுதியை நினைவுகூர்ந்து, எங்காவது நன்றியறிதல் குறைந்துவிட்டதா எனப் பார்த்து, குறைந்த இடத்தைக் கண்டு, குறைவை நிறைவாக்கினால் பிரச்சனை மறையும் என்பது இதன் அடிப்படைக் கருத்து.

கற்பனைக்கெட்டாத விலையுள்ள பொருளைப் பெற, ஊரில் எவருக்கும் கிடைக்க முடியாத சிபாரிசு கிடைத்த சமயத்தில், வந்த பெருந்தடைகளை நன்றி குன்றிய இடத்தில் குறைவை நிறைவு செய்து, தடையை விலக்கிப் பலன் பெற்றவர் உண்டு. அன்னை சம்பந்தப்பட்ட விஷயங்களில் மனிதர்களும், பொருட்களும், நிகழ்ச்சிகளும் வழக்கத்திற்கு மாறாக நன்றியுணர்வுள்ளவர்களாக இருப்பார்கள். சில சமயங்களில் மனிதர்கள் தவறினாலும், உதவியைப் பெற்றுக்கொண்ட பொருட்கள், இடங்கள் நன்றியை உணர்ந்து அதன்படி நடப்பார்கள்.

ஒரு பிரம்மாண்டமான எஸ்டேட், ஆங்கிலேயருடையது. உலகத்தில் யாரும் காணாத மாதிரி விவசாயம் செய்தார். அவர் இருந்த இடத்திலிருந்து 15 மைலுக்கு அப்பால்தான் எலக்ட்ரிசிட்டி இருந்தது. எல்லா வேலைகளையும் முடித்த அவர் மின்சாரம் பெற முனைந்தார். அருகிலுள்ள கிராமத்திற்கு மின்சாரம் வருவதானால்தான் எஸ்டேட்டிற்குக் கிடைக்கும் என்பதால், அந்தக் கிராமத்திற்காக இவர் முனைந்து பாடுபட்டார். மின்சாரம் மின்னல் வேகத்தில் கிராமத்திற்கு வந்துவிட்டது. அந்த ஊர் மக்களுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தத் தெரியவில்லை. தெருவிளக்கோடு நின்றுவிட்டது. **Estimate** போட்ட டிபார்ட்மென்டார் பல வழிகளையும் **(route)** கணித்து, சிக்கனமான வழியாக **(route)** மின்சாரத்தைக் கொண்டு வந்தனர். இந்த முறையில் எஸ்டேட் விடுபட்டுவிட்டது. எஸ்டேட்டுக்கும், எலக்ட்ரிக் லைனுக்கும் 2 மைல் இருக்கிறது. எனவே எஸ்டேட்டிற்கு மின்சாரம் கிடைக்கவில்லை. 15 வருஷமாகியும் கிடைக்கவில்லை. எஸ்டேட்டோடு முக்கியமாக தொடர்புள்ள ஒருவர் வெளியூரிலுள்ள அவருடைய நண்பரை அழைத்து வந்து எஸ்டேட்டைக் காட்டி உதவி கேட்டார். நண்பரின் செல்வாக்கு 15 நாளில் எஸ்டேட்டிற்கு மின்சாரத்தைக்

கொண்டுவந்து கொடுத்தது. மின்சாரம் கிடைத்த செய்தியைக்-கூட எஸ்டேட்டில் உள்ளவர்களோ, உதவியைக் கேட்டவரோ வாங்கிக் கொடுத்தவருக்குச் சொல்லக்கூட இல்லை. அவரே டிபார்ட்மென்டில் கேட்டு விஷயத்தைத் தெரிந்து கொண்டதுடன், உதவியைப் பெற்றவர்களின் ''நன்றியுணர்வை''யும் தெரிந்துகொண்டார். சாதாரணமாக மனிதர்கள் இப்படித்தான் செயல்படுவார்கள். ஏதோ ஒரு வகையில் அன்னையிடம் தொடர்புள்ள இடம் இது. 20, 30 ஆண்டுகட்குமுன் அன்னையின் கார் அந்த வழியாகப் போயிருக்கின்றதாம்.

கொஞ்ச நாள் கழித்து மின்சாரத்தை எஸ்டேட்டுக்கு வாங்கிக் கொடுத்தவர் தம் ஊரில் தம் நண்பரிடம் ஓர் அல்சேஷியன் குட்டி வேண்டுமெனக் கேட்டார். நண்பர் நல்லதொரு நாய்க்குட்டியை அவருக்கு இரண்டு நாளில் கொண்டுவந்து கொடுத்தார். பிறகு விசாரிக்கப்போனால், அந்த நாய்க்குட்டி மேலே சொன்ன எஸ்டேட்டிலிருந்து வந்ததாம். மனிதர்களுக்கில்லாத நன்றியுணர்வை உதவியைப் பெற்றுக்கொண்ட நிலம் தெரிவிக்கிறது. அன்னையின் சிறப்பு இது.

ஒரு பெரிய சொத்து. உரிமைப் பிரச்சனை எழுந்தது. அநியாயக்காரன் அநியாயமாக எழுப்பியது. பிரச்சனை நாளுக்கு நாள் வளருகின்றதே தவிர குறையவில்லை. பல ஆண்டுகளாக வம்பு, பின்னர் வழக்கு, 3 கோர்ட்டுகளுக்குப் போய்விட்டது. அநியாயக்காரனுக்கே காலமாயிருந்தது. பலனைப் பெற வேண்டியவர்கள் ஒன்றுகூடினார்கள். அநியாயத்தை வாய் ஓய நிந்தித்தார்கள். ஒருவர் மட்டும் கேட்டார், ''அடிப்படையில் பெரும் பலனைப் பெற வேண்டியவருக்கு நன்றியுணர்விருக்கிறதா?'' என்று. சம்பந்தப்பட்டவர் வெட்கப்பட்டார். மனம் மாற சம்மதிக்கவில்லை. ஆனால் ''நான் அந்தக் குறை உடையவன்'' என்று ஒத்துக் கொண்டார். மறுநாள் மாலை கோர்ட்டில் இருந்த வழக்கு வெளியே கொணரப்பட்டு நியாயமாகத் தீர்ந்தது. நன்றியறிதலுக்குள்ள வலு அது. ஒரு தடங்கல் ஏற்பட்டால், அது சம்பந்தமாக ஏதாவது ஓர் இடத்தில் நன்றியுணர்வு குறைவதைக் கண்டுபிடித்து அதை நிவர்த்தி செய்தால், தடங்கல் விலகும்.



அன்னையிடம் வந்தபின் வாழ்க்கையில் நிகழ்ந்த நல்லவைகட்கெல்லாம் பூரண நன்றியுணர்வுடன் மனம் சிறப்படைந்தால், எதிர்காலத்தில் தடங்கல், குறை, பிரச்சனை வாராது. தற்போது 6 பிரச்சனைகள் உள்ள ஒரு பக்தர் தாம் அன்னையை ஏற்றுக் கொண்டதிலிருந்து நிகழ்ந்தவற்றை நினைவுகூர்ந்து நன்றியுணர்வை பூரணப்படுத்தினால், அந்த 6 பிரச்சனைகளும் விலகிவிடும்.

நன்றியுணர்தல் வழிபாட்டுக்குரிய முறை; பிரச்சனைகளைத் தீர்க்கவல்ல சிறந்த முறையும்கூட.

**29. செயல்களுக்குள்ள அர்த்தபூர்வமான தொடர்பு:**

ஆன்மீக அடிப்படையின்படி நாமும், நாம் வாழும் சூழ்நிலையும், பிரம்மம் என்றதனால் ஆனதே. மனிதனுடைய ஊனக் கண்ணுக்கே நாம் வேறு, எதிரில் உள்ள சுவர் வேறு என்று தெரிகிறது. இரண்டும் பிரம்மத்தால் ஆனதே. இதுவே ஆன்மீக அடிப்படை.

புற நிகழ்ச்சிகள் அக உணர்ச்சிகளின் பிரதிபலிப்பே என்பது அன்னையின் வாக்கு. ஆன்மீகத் தெளிவுள்ள யோகி புற நிகழ்ச்சிகளைத் தம் உள்ளுணர்வால் தெரிந்துகொள்கிறான். இதை மனக்கண் (inner eye) எனலாம். முதிர்ந்த யோகிக்கு ஞானதிருஷ்டி இருக்கிறது. எதிர்காலத்தை அறிவதற்கும் அவர் தம்முள்ளே இருப்பதைக்கொண்டே தெரிந்து கொள்கிறார்.

சாதாரண மனிதனுக்குத் தன் உள்ளுணர்வு பெரும்பாலும் புரிவதில்லை. தனக்குள்ள அறிவின் திறனை மாணவன் தனக்குக் கிடைக்கும் மார்க்கைக் கொண்டுதான் புரிந்துகொள்ள முடிகிறது. சொந்தமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு மாணவன் 9-ஆம் வகுப்புவரை கணக்கில் பொதுவாக பூஜ்யமும், சில சமயங்களில் 7, 8, 10 மார்க்கும் வாங்குவது வழக்கம். 10-ஆம் வகுப்பில் புதிய ஆசிரியர் வந்தார். அவன் 92 மார்க் வாங்கி, இரண்டாம் மாணவனாக வந்தான். தனக்குள்ள திறமையை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. மார்க் என்ற கண்ணாடி வளைவாக இருந்ததால் அவனது திறமையை அது தலைகீழாகப் பிரதிபலித்தது. தனக்குள்ள குறைகளை

மனிதன் லேசாகப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் அவனது புற நிகழ்ச்சிகள் துல்லியமாக அவற்றைப் பிரதிபலிக்கும். புற நிகழ்ச்சிகளைக் கொண்டு தன்னை உணர மனிதன் ஆரம்பித்தால் அவனுக்குப் புரியாததே ஒன்றும் இருக்காது. தன்னைச் சரிவர புரிந்துகொள்பவனுக்குப் பிரச்சனை இருக்க முடியாது. அன்னையை வழிபட அதைவிடச் சிறந்த முறை ஒன்று இல்லை. ஏனென்றால், ஒவ்வொரு நிகழ்ச்சியும் எந்த அளவு நாம் மனதில் அன்னையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாகப் பிரதிபலிக்கும்.

ஆறு மாதத்திற்கொருமுறை நாம் ஒருவர் வீட்டிற்குப் போவோம். ஒவ்வொரு முறையும் அங்கு வேறொருவரைச் சந்திப்போம். இதைத் தற்செயலாக நடந்ததாகக் கொள்ளலாம். அப்படிக் கொள்வதால் அந்த நிகழ்ச்சியில் பொதிந்துள்ள அர்த்தத்தை இழந்துவிடுவோம். ஏதோ அதில் ஓர் உண்மை பிரதிபலிக்கிறது என்பதை நாம் அறிந்து கொண்டால், பிற்காலத்தில் வேறு சந்தர்ப்ப விசேஷங்களால் அவரும், நாமும் சேர்ந்து செயல்பட நேரிடும்பொழுது முந்தைய நிகழ்ச்சி இதைச் சுட்டிக் காட்டியது தெரியும். எந்த ஒரு செயலுக்கும் அர்த்தம் உண்டு. அதை நாம் புரிந்துகொள்ள முயல்வது நல்லது. 40 வயதிற்கு மேற்பட்டபின் நம் இளம்வயது நிகழ்ச்சிகளை இன்று கூர்ந்து ஆராய்ந்தால், பின்வரும் நிகழ்ச்சிகளை முன் நடந்தவை அறிவுறுத்தியுள்ளது தெரியும்.

ஒருவர் தம் மாணவ நாட்களில் தம் அனுபவத்தைச் சொல்லும் பொழுது, ''எனக்கு **B.A.** பாஸ் செய்யும்வரை ஒரு வகுப்பில்கூட நல்ல ஆசிரியர் அமைந்ததில்லை. பள்ளியில் இருப்பதிலேயே சொத்தையான ஆசிரியரே அமைவது வழக்கம்'' என்றார். அவர் ஆசிரியரானார். அவரும் சொத்தை ஆசிரியராக ரிடையர் ஆனார். மற்றொருவர் சாதாரண பள்ளிகளிலும், பிரபலம் இல்லாத கல்லூரிகளிலும் பயின்றவர். ஸ்தாபனத்தில் உள்ள சிறப்பான ஆசிரியர்கள் எனக்குத் தவறாது கடைசிவரை அமைந்தார்கள் என்றார். பிற்காலத்தில் இவர் சிறந்த கருத்துகளை, உயர்ந்த முறையில் பலருக்குச் சொல்லக்கூடிய நிலைக்கு வந்தார். மனம் போல் மாங்கல்யம் என்ற வழக்கில் இந்த உண்மை தெரிகிறது.



ஒரு கல்லூரி ஆசிரியர் இலட்சியவாதி, தேசீயவாதி, நிறையப் படித்தவர். பெரிய லைப்ரரியை வீட்டில் வைத்திருப்பவர். நேருவின் **(Glimpses of World History)** புதிய பதிப்பு வந்தவுடன் ஆர்வமாக அதை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார். இவர் கடவுள் நம்பிக்கை இல்லாத பகுத்தறிவுவாதி. 3 பக்கம் படித்தவுடன் தவறான செய்தி வந்தது. புத்தகத்தை மூடிவிட்டு, செய்தியை நாடிச் சென்றார். ''அந்தப் புத்தகத்தை எப்பொழுது எடுத்துப் படித்தாலும் ஏதாவது தவறான செய்தி வருகிறது. 20 பக்கத்திற்கு மேல் நான் படிக்கவில்லை. என் பகுத்தறிவு மனச்சாட்சி என்னை உறுத்துகிறது'' என்று நண்பர்களிடமும், மேடையிலும் பேசுவார். ஒரு முறை புத்தகத்தை எடுத்து, 'இம்முறை முடிக்காமல் வைக்கப்போவது இல்லை' என்று திடமாக உட்கார்ந்தார். தந்தி வந்தது. ஒரே தம்பி, 32 வயதான இன்ஜினீயர் விபத்தில் மாட்டி இறந்துவிட்டான் என்றது செய்தி. ''இனிமேல் எனக்கு ஆராய்ச்சியும் தேவையில்லை. பகுத்தறிவும் தேவையில்லை. இந்தப் புத்தகத்தை இனி தொட மாட்டேன்'' என்றார். எது உண்மையோ, இல்லையோ, அந்தப் புத்தகத்திற்கும், அவருக்குக் கிடைத்த செய்திக்கும் தொடர்புண்டு. இந்தத் தொடர்பே நமக்கு முக்கியம். தொடர்பை அறிவது அவசியம். அதன் மூலம் நம்மை அறிவது பலன் தரும். எதிர்ப்பார்த்தால் நடக்காது. இச்சை அற்றுப்போனால் சித்திக்கும் என்பவை நம் பழக்கத்திலுள்ள கருத்துகள். அவற்றின் உண்மையை நாம் அனுபவத்தில் அறிவோம்.

பலன் கருதாது கடமையைச் செய்ய வேண்டும் என்பது கீதை. பலனை மறந்து காரியத்தில் தீவிரமாக ஈடுபட்டால் கிடைக்கும் பலன் அபரிமிதமானது என்பது அனுபவம். பலனை மறந்து, காரியத்தைச் சமர்ப்பணம் செய்து, அன்னை நினைவுடன் தன்னை மறந்து செயல்பட்டால், உள்ளே ஆனந்தம் பிறக்கும். காரியம் வெற்றியா, தோல்வியா எனக் கேட்க வேண்டாம். பருத்தி புடவையாகக் காய்த்தது போலிருக்கும் பலன். புற நிகழ்ச்சி அக உணர்வை முழுவதுமாகப் பிரதிபலிக்கின்றது. திறமையாகச் செயல்பட்டால் முழுமையான பலன் கிடைக்கும். கடமையை மட்டும்

கருதிச் செயல்பட்டால், பலன் அடுத்த உயர்ந்த கட்டத்தில் கிடைக்கும். கடமையையும் சமர்ப்பணம் செய்து செயலாற்றினால், வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு நம்மை இந்தச் செயல் அழைத்துச் செல்லும். ஒருவர் பரிசை நாடிப் போனார். அவருக்கே பரிசைக் கொடுப்பதாகக் கமிட்டி ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. அவர் பதட்டத்துடனிருந்தார். கடைசிக் கட்டத்தில் அவர் பெயரை அடித்து, கமிட்டியின் சிபாரிசைப் புறக்கணித்து வேறு ஒருவருக்குப் பரிசளித்தனர். அவர் பரிசை மறந்தார். தமக்குரிய மற்றக் கடமைகளில் ஈடுபட்டு சிறப்பாகச் செயலாற்றினார். ஒருமுறை இரவு வெகுநேரம் கண் விழித்து காரியங்களை முடிக்கவேண்டிய சமயம். அர்த்த இராத்திரியில் கதவைத் தட்டி, ‘‘உங்களுக்குப் பரிசளித்தாகிவிட்டது. எந்நேரமானாலும் சொல்லவேண்டுமென வந்தேன். சென்ற ஆண்டு தவறியது இந்த ஆண்டு கிடைத்தது’’ என்று வீடு தேடி வந்தது செய்தி. மேலும் அவர் கடமைகளை அர்ப்பணித்துச் செயல்பட ஆரம்பித்தார். பரிசளிக்கும் கமிட்டி மெம்பர் பதவி அவரைத் தேடி வந்தது. மனநிலையை வெளி நிகழ்ச்சிகள் பிரதிபலிக்கின்றன.

விருப்பு, வெறுப்பின்றி நம் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், செயல்களையும் கூர்ந்து கவனித்து, நமக்கு வரும் கடிதங்கள், வரும் விசிட்டர்கள், நம் வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டேயிருந்தால், இந்தத் தொடர்பு பூரணமாகத் தெரியவரும். அது ஒரு முழுமையான ஞானம் **(total knowledge)**, நம் வாழ்க்கையின் எதிர்காலப் பாதையை வகுத்துக்கொள்ள உதவும். பிரச்சனைகள் ஏற்பட்டால், மனதில் எதை மாற்றி வெளியில் பிரச்சனைகளைத் தீர்க்கலாம் என விளங்கும்; பிரச்சனைகள் விலகும்; வாழ்க்கை புரியும்; நம் கட்டுப்பாட்டில் வரும். மனதில் உள்ள அன்னை நினைவுக்குப் புற வாழ்க்கையில் என்ன பலன்கள் கிடைக்கின்றன என்பது பூரணமாகத் தெரியவரும். மானஸீக வழிபாட்டின் சிறப்பையும் அதனால் வாழ்க்கையில் ஏற்படும் பெரும் பலனையும் அறியலாம்.

மனத்தைத் தெளிவாக வைத்துக்கொள்ளுதல் சிறப்பு.



மனத்தில் அன்னையின் நினைவை ஆர்வமாக, நிரந்தரமாக இருத்திக் கொள்ளுதல் உயர்வு. இந்த உயர்ந்த மனப்பான்மையை ஒருமுறை பூரணமாக ஏற்படுத்தி, சில நாள் அப்படியே தொடர்ந்தால், வாழ்க்கை இதுவரை நமக்களிக்காத பரிசுகளை எல்லாம் தொடர்ந்து, இனிமையாக வழங்கிக்கொண்டேயிருக்கும் என்பதைக் காணலாம்.

இதுபோன்ற நிலையில் மனம் நிலைத்து நிற்கும்பொழுது கண்ணில் படும் நிகழ்ச்சிகள், காதால் கேட்கும் சொற்கள், நம் இன்றைய மனநிலையையும், நாளை நடக்கப் போவதையும் பூரணமாக எதிரொலிப்பதைப் பார்க்கலாம்.

இந்த அறிவைப் பெற்றபின் எந்தப் புற நிகழ்ச்சியை, எந்த உள்ளுணர்வால் மாற்றலாம் என்பது தெரியும். மனமாற்றத்தால் நிகழ்ச்சி மாறுவதைக் கண்கூடாகக் காணலாம்.

இப்படிப்பட்ட ஞானத்தால் வழிபாடு செய்யவேண்டுமானால், அன்னையை என் உணர்ச்சிகளில் நான் பிரதிஷ்டை செய்கிறேன். அன்னை எனக்களிக்கும் வாழ்வை மனநிறைவுடன் ஏற்றுக்கொள்கிறேன் என்ற முடிவுக்கு வந்தால் வழிபாடு பக்தியாகும்; வாழ்க்கை ஒளிமயமாகும்.

### *30. சிந்தனைக்குரிய ஆராய்ச்சி:*

ஆத்மாவை அடைய ஞானத்தைத் தேடுகிறோம். ஞானம் என்பது அறிவு; ஆனால் ஆத்மாவை அறியும் அறிவு. பூவுலகத்தில் பெறக்கூடியவற்றில் சிறந்தது ஞானம். அதனுடைய ஆரம்பத்தை ஞானோதயம் என்கிறோம்.

மகான்களுக்குரியது ஞானமானால், மக்களுக்குரியது அறிவு. எளிய பாஷையில் புத்திசாலித்தனம் என்பர். அன்னையை வழிபடுவதற்கு உரிய முறைகளில் சிந்தனை என்பதையும் நாம் ஒன்றாகக் கொள்ளலாம். மனத்தின் கருவியான சிந்தனை சிறப்பாக இருந்தால், நம் வழிபாடு சிறப்பாக இருக்கும். இந்தக் கட்டுரையில் அன்பர்கள் தங்கள் வழிபாட்டை வாழ்க்கை விளக்கம் பெற்றதாக அமைப்பதெப்படி என்றே முதலிலிருந்து கருதி வருவதால், பிரச்சனைகள் தீர சிந்தனை எப்படிப் பயன்படும் என்பதை விளக்கமாகப் பார்ப்போம்.

தெளிவில்லாததால் பிரச்சனைகள் உற்பத்தியாகின்றன. தெளிவு ஏற்பட்டால் பிரச்சனை விலகும் என்பது நாம் அறிந்த ஒன்று. தெளிவிருந்தாலும் தீராத பிரச்சனைகள் இல்லையா என்று ஒரு கேள்வி. அதற்கு இரு வகைகளில் பதில் சொல்லலாம். (1) தீராத பிரச்சனைக்குரிய தெளிவு ஏற்பட்டால் அது தீரும். (2) அப்படி ஒரு பிரச்சனை இருந்தால், அது நூற்றுக்கு ஒன்றாக இருக்கும். தற்சமயம் அதை மட்டும் விலக்கிப் பொதுவாக எல்லோரையும் பாதிக்கும் பிரச்சனைகளுக்குச் சிந்தனை எப்படிப் பயன்படும் என்பதை மட்டும் கவனிப்போம்.

எந்த ஒரு காரியத்தையும் நாம் கற்றுக்கொள்ளும்போது நுணுக்கமாகக் கற்றுக்கொள்கிறோம். அக்காரியத்திற்கே உரிய நுணுக்கத்தைக் கூர்ந்து அறிந்து பற்றிக்கொள்கிறோம். இது அனுபவத்தால் பெறக்கூடியது. சூட்சுமமாகக் கவனிப்பதால் சீக்கிரமாகப் புரிந்துகொள்ளலாம். கொச்சை மொழியில் குழந்தைகளைப் பற்றிச் சொல்லும்பொழுது ''சூட்டிகை''யான குழந்தை; ஒரு முறைக்கு மேல் சொல்ல வேண்டியதில்லை என்பது இந்தச் சூட்சும அறிவைக் குறிக்கிறது. இதை வாழ்க்கையில் எல்லா இடங்களிலும் பார்க்கலாம். இது இல்லாதவர்களுக்குக் காரியம் மெதுவாக முடியும்; கடினமாக இருக்கும்; அவர்களுக்குத் தடை ஏற்படும்; பிரச்சனை வரும். 40 பேருக்கு தினம் கூலி கொடுக்கும் இடத்தில் பணத்தை ரூ.100, 50 நோட்டாகக் கொண்டுவந்து பிரித்துக் கொடுக்கச் சிரமப்பட்டு, சண்டை வளர்த்து, பட்டுவாடாவுக்கு இரண்டரை மணி நேரம் ஆகிறது. அதேபோல் மற்றோர் இடத்தில் பாங்கில் பணம் வாங்கும்பொழுதே சில்லறையாக வாங்கி வந்து, தலைக்கு என்ன கூலி என்று 1 மணி நேரம் முன்னதாக எடுத்து, தனிக்கவர்களில் போட்டு வைத்து 40 பேருக்கும் 10 நிமிஷத்தில் பட்டுவாடாவை முடித்துவிடுகிறார். இது ஒரு வகை அறிவு.

4 வருஷமாகத் தலைவலி மண்டையைப் பிளக்கிறது. அந்தத் தலைவலி மருந்துக்கும் கட்டுப்படவில்லை என ஒரு கிராமவாசி படித்தவரிடம் சொன்னபொழுது, கண் பார்வையைச் சோதனை செய்யச் சொன்னார்; பார்வை குறைவாயிருந்தது; கண்ணாடி போட்டவுடன் வலி போய்விட்டது. கிராமவாசிக்கு,



தலைவலிக்கும், கண் பார்வைக்கும் உள்ள தொடர்பு தெரியவே முடியாது. விவரம் தெரியாததால் ஏற்படும் குறை இது. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு உண்டு. ஆனால் அவனுக்குத் தெரியவில்லை.

1946-இல் ஒரு நெசவாளியின் மகள் இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருந்தாள். கணக்கில் எப்பொழுதும் 100-க்கு 100-உம், பௌதிகத்திலும், இரசாயனத்திலும் 90-க்கு மேலும் மார்க் வாங்குவது வழக்கம். தமிழில் மட்டும் எப்பொழுதும் முதல் மார்க்குக்குரிய பெண் அவள். இரண்டாம் வருஷம் செலக்ஷனில் இப்பெண்ணைப் பெயிலாக்கி, பெயிலான 6 பேரில் ஒருத்தியாக அறிவித்தார்கள். 500 பேரில் 6 பேர் மட்டுமே பெயில். அந்த ஆறு பேர்களில் இவளும் ஒருத்தி; காரணம் புரியவில்லை. அவளுடைய கிராமத்தைச் சுற்றியுள்ள இடங்களிலிருந்து சுமார் 10, 12 மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் படிப்பதற்காக ஒரே தெருவில் குடியிருந்தார்கள். சிறப்பான மாணவிக்குச் சிக்கல் வந்துவிட்டது. எல்லோரும் கூடிப் புலம்பினார்கள். வண்டி அழைத்து வந்தார் தகப்பனார். பெட்டி, படுக்கைகளை ஏற்றி விட்டார்கள். அந்தச் சமயம் அதே தெருவில் இருந்த மற்றொரு மாணவன் வந்து என்ன விஷயம் என்று விசாரித்தார். அவர் விபரம் தெரிந்தவர். இந்த மாணவியின் வகுப்பில் படிப்பவர். ஒரு மாதம் நோய்வாய்ப்பட்டு இந்த மாணவி கல்லூரிக்கு வரவில்லை. அதற்கான டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுக்கவில்லை. அதனால் போதுமான வருகை **(attendance)** இல்லாததால் **(unselected)** தேர்வு ஆகவில்லை என்பது அவருக்குப் புரிந்துவிட்டது. பெண்ணின் தகப்பனாரிடம் விளக்கிச் சொன்னார். 20 பேர் சொல்லும்பொழுது ஒருவர் மட்டும் மாற்றிச் சொல்வதை எப்படி நம்புவது? பெண்ணை அழைத்துக்கொண்டு கல்லூரி புரொபஸரிடம் போய்க் கேட்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பெரியவரும், மகளும் இசைந்தார்கள். புரொபசர், ''சர்ட்டிபிகேட் வேண்டும்; வந்தால் போதும்'' என்றார். மாணவி பரீட்சை எழுதி, முதல் வகுப்பில் **(I class)** பாஸ் செய்து, 3 பாடங்களில் முதலாவதாக வந்து பரிசு பெற்றாள்.

அவர்களுக்குப் பிரச்சனை மிகப்பெரியது. ரிஜிஸ்ட்ரார் கையெழுத்திட்டு, நோட்டீஸ் போட்டபின் மாற்ற முடியாது என்று உடனிருந்த கிராமத்து மாணவர்கள் அனைவரும் சொன்னார்கள். எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வுண்டு. தன்னைவிட அதிக விவரம் தெரிந்தவர்களை விசாரிக்க வேண்டும், அல்லது ஒரு புரொபஸரை விசாரிக்க வேண்டும். அது சம்பந்தமாக அதிக விபரம் தெரிந்தவர்களைக் கேட்க வேண்டும். பலரானாலும், எல்லோரும் நம்மைப் போன்றவர்களானால், அவர்களுடைய யோசனைக்கு அர்த்தமில்லை.

விவரம் தெரியாமல், விஷயம் தெரியாமல், விதிகள் தெரியாமல், சட்டம் தெரியாமல், வாழ்க்கை நுணுக்கம் அறியாமல், இங்கிதம் உணராமல், நாட்டு வழக்கம் புரியாமல், பிரச்சனைக்குரிய அனுபவமில்லாமல் தமக்குத் தெரிந்ததையே நம்பும் பழக்கத்தாலும், இழந்த சொத்துகள், விட்டுப்போன பிரமோஷன், பிரிந்துபோன குடும்பங்கள், உடைந்துபோன கட்சிகள், விரயமான பெருந்தொகைகள் ஏராளம்.

பிரச்சனை என்று ஒன்று ஏற்பட்டால், ஆயிரத்தில் ஒன்று தவிர, அதற்கு அறிவுபூர்வமான தீர்வுண்டு. அது நமக்குத் தெரியாமல் இருக்கலாம். எவருக்குமே இந்தப் பிரச்சனை வந்து தீர்ந்ததில்லை என்றால் அதற்குத் தீர்வில்லை எனலாம். ஒருவருக்குத் தீர்ந்துள்ளது என்றால், அவருக்கு ஏற்பட்ட மார்க்கம் எது, அது நமக்குக் கிடைக்குமா என ஆராய்ந்து பார்க்கலாம்.

பொதுவாகப் பிரச்சனைகள் வந்தபின், அது தீராது என்று முடிவு செய்வதை விட்டு, நாமே யோசனை செய்தால் பாதி பிரச்சனைகளுக்கு வழி பிறக்கும். நம்மைவிட அறிவாளிகள், அனுபவசாலிகளைக் கேட்டால், முக்கால்வாசி பிரச்சனைக்கு வழி உண்டு. அதே துறையில் உள்ளவர்களை அணுகினால் சிக்கலும் உடையும். நுணுக்கமானவரைக் கலந்தால் எதற்கும் வழி பிறக்கும். இதையெல்லாம் தாண்டி ஒரு பிரச்சனை மிச்சமானால், பிறகு செய்யும் பிரார்த்தனை உடனே பலிக்கும்.

படித்தவர் ஒருவருக்கு ஏதாவது ஒரு கொப்புளம் வருகிறது. ஒன்று மறைந்தால் மற்றது தோன்றுகிறது. பல டாக்டர்களுக்குப் பிடிபடவில்லை. கவலையுடன் இருந்த அவரை ஓர் அமெரிக்கர்



கேட்டார். ''எத்தனை நாளாக இது இருக்கிறது? அப்பொழுது என்ன பழக்கம் மேற்கொண்டீர்கள்? குறிப்பாக, உணவில் என்ன பழக்கம் ஏற்பட்டது?'' என்று. தாம் காப்பி சாப்பிடுவதில்லை; புதியதாகக் காப்பி சாப்பிட ஆரம்பித்ததாகச் சொன்னார். ''அப்படியானால் காபியை நிறுத்திப் பார்த்தால் தேவலை'' என்றார். காபியை நிறுத்தினார். கொப்புளம் நின்றுவிட்டது.

ஆராய்ச்சி, சிந்தனை என்பது நல்லது. சிந்திக்கும் மனத்தில் அன்னையின் சக்தி சிறப்பாகச் செயல்படும். சிந்தனையே பிரச்சனையைத் தீர்க்கும். அது தீர்க்காவிட்டாலும், மனம் சிந்தித்தால் சிறப்படையும்; அன்னை சிறப்பாகச் செயல்படுவார்; பிரச்சனை தீரும்.

31 வயதுவரை திருமணம் தட்டிப்போகும் ஒரு செல்வர் மகளை விசாரித்தவர், அப்பெண் முதலில் வந்த வரன்களை வேண்டாம் என்று சொல்லும் பழக்கம் உடையவர் எனத் தெரிந்து, அதில் உள்ள சூட்சுமத்தைத் தெரிவித்தார். ஒரு வரனை நமக்குப் பிடிக்கவில்லை என்பது வேறு; வருகிற வரனை வேண்டாம் என்று சொல்வது வேறு. அப்படிச் சொன்னால் மேலும் வரும் வரன் தவறிவிடும் என்பது **(subtle truth)** சூட்சுமமான உண்மை. அப்பெண் அதை உணர்ந்து ஏற்றுக்கொண்டபின் வந்த முதல் வரனுக்குத் திருமணம் முடிந்தது.

பிரச்சனைகளைத் தீர்க்க சிந்தனை உதவுவதுபோல், வாய்ப்புகளை உற்பத்தி செய்யவும் உதவும்.

**S.S.L.C.** சிரமப்பட்டு முடித்து **(complete) attender-**ஆக இருந்து கிளார்க்கானவர் ஒருவர், யாராவது சரளமாக இங்கிலீஷ் பேசினால், அவரைத் தேவலோகப் பிறவியாகப் பாவிப்பார். ஆங்கிலம் பேச முழு ஆசை. அமைப்பு அப்படியில்லை. அவருடைய அவாவைக் கண்ணுற்ற ஒருவர், மொழி நுணுக்கத்தை அறிந்தவர். மொழியைக் கற்றுக்கொள்ள அறிவு தேவையில்லை என்பது சர்வதேச நிபுணர்கள் அறிந்த ஒன்று. எந்த நாட்டிலும் அறிவில்லாதவர்கள் உண்டு. அவர்கள் அந்த நாட்டு மொழியைப் பேசுகிறார்கள். ஒரு மொழியை அறிந்தவனுக்கு மற்றெந்த மொழியையும் பயிலும் திறன்

உண்டு. சர்வதேச வல்லுநர்கள் அறிந்த இந்த மொழியியல் நுணுக்கங்களை நம் நாட்டில் படித்த அறிஞர்களே ஆங்கிலம் சம்பந்தப்பட்டவரை ஒத்துக்கொள்ளத் தயங்குவார்கள். இந்தியாவில் ஆங்கிலத்திற்குள்ள அந்தஸ்து அது. இந்தக் கிளார்க் எப்படி அதை ஏற்றுக்கொள்வார்? அவருடைய ஆர்வம் கருதி, அவரை ஆங்கிலம் பேசவைக்க முயன்று, அதில் உள்ள நுணுக்கத்தில் முக்கியமான ஒன்றை விளக்கி, ஒரு முறையையும் சொல்லிக் கொடுத்தார். ‘‘உங்கள் சிந்தனையை முழுமையாக மாற்றி, ஆங்கிலத்திலேயே சிந்திக்க முயன்று, சிந்தனையில் பூரண வெற்றி பெற்றால், பிறகு பேசுவது பலிக்கும்’’ என்று சொன்னார். அவரும் முப்பதாம் நாள் பேச ஆரம்பித்து, சரளமாக ஆங்கிலம் பேசக் கற்றுக்கொண்டார்.

பசுமைப் புரட்சியின் வெற்றிக்கு வித்தானது இதுபோன்ற ஒரு நுட்ப அறிவுதான். விவசாயி ஓர் ஏக்கரில் 15 மூட்டை மகசூலை 17 மூட்டையாக மாற்றி, நாட்டின் உற்பத்தியைப் பெருக்கத் தான் பரம்பரையாகக் கையாளும் பழக்கத்தை விட்டு, புதிய முறையைக் கற்றுக்கொள்ள முன்வரமாட்டான். 15 மூட்டைகள் விளைந்த இடத்தில் 25 மூட்டைகள் விளையுமானால், விவசாயி புதிய முறையைக் கற்றுக் கொள்வான். உற்பத்தி பெருகி, விலை குறைந்தால், விவசாயி பழைய பழக்கத்திற்குப் போய்விடுவான். அவன் எவ்வளவு உற்பத்தி செய்தாலும் சர்க்கார் நல்ல விலைக்கு வாங்க உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்ற இரு நுட்பங்களே பசுமைப் புரட்சியின் வெற்றிக்குக் காரணம். C. சுப்ரமணியம் பரம்பரை விவசாயக் குடும்பத்தினர். அக்காரணத்தாலேயே அவருக்கு இந்த சூட்சுமங்கள் விளங்கின.

பிரச்சனைகளைத் தீர்க்கவும், வாய்ப்பைப் பெறவும், அன்னையின் அருளை அதிகமாகப் பெறவும் சிந்திக்கும் ஆற்றல் துணை புரியும்.

தொடரும்...



## ஆத்மாவின் இருமுனைகள்

கர்மயோகி

- மனிதனுடைய ஆயுள் முடிய அவனுடைய சம்மதம் தேவை. மனிதனாகிய ஜீவாத்மா முடிவு செய்யாமல் உயிர் உடலை விட்டுப் பிரியாது என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.
- மேலும் பரமாத்மாவின் உத்தரவும் தேவை.
- பரமாத்மாவும், ஜீவாத்மாவும் சம்மதிக்காமல் உயிர் உடலை விட்டுப் போகாது.
- எந்த சிறு காரியத்திற்கும் பிரபஞ்ச சட்டம் இதுவே.
- ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஆத்மாவின் இரு முனைகள் என்பதால் ஒன்று சம்மதப்பட்டால், இரண்டும் சம்மதப்படுவதாக அர்த்தம்.
- உலகிலும், பிரபஞ்சத்திலும் உயிருடையது ஆத்மா மட்டுமே.
- மற்ற அனைத்தும் ஆத்மாவுடன் தொடர்பு கொள்வதால் உயிர் பெறுகின்றன.
- ஆத்மாவின் ஒருமுனை பிரம்மம். அடுத்த முனை வாழ்வு.
- ஆத்மா அறிவாலும், அறிவின் திறனாலும் செயல்படுகிறது.
- பிரம்மமே முதல், அதுவே முடிவு என்பது ஸ்ரீ அரவிந்தம்.
- மேலிருந்து கீழே வருவது சிருஷ்டி. கீழிருந்து மேலே போவது பரிணாமம்.
- இவற்றிடையே ஆயிரம் இடங்கள் அனந்தமான வீச்சுடனிருக்கின்றன.
- மனிதன் தானுள்ள இடத்திலிருந்து மேலே போகலாம். கீழே போகலாம். வலது பக்கமோ, இடது பக்கமோ, எந்த பக்கமோ முடிவில்லாமல் போகலாம்.
- **இது பிரம்மத்தின் சுதந்திரம். மனிதன் பிரம்மம் என்பதால், அவன் பெற்ற சுதந்திரம்.**

- தவம், துறவறம், மோட்சம் மேலே போவது. உள்ளதுபோல் சீரழிந்து அவல வாழ்வில் ஒதுக்கப்பட்டு ஜடமாவது கீழே போவது. வலது பக்கம் போவது சமூகத்தில் சிறப்புடன் வாழ்வது. இடது பக்கம் போவது சமூகத்தில் தவறான செல்வத்துடன் வாழ்வது. இதுபோல் மனிதனுக்குரிய பாதைகள் முடிவற்றவை.
- உள்ளேபோய் மேலே போவது பரிணாமம். சத்திய ஜீவனாவது.
- **ஆண்டவனும், அன்னையும் மனிதன் சுதந்திரத்தில் குறுக்கிடுவதில்லை.**
- ஆத்மா அறிவால் உணர்ந்து, திறனால் செயல்பட்டால் எதையும் சாதிக்கும்.
- உணர்வது அருள், செயல்படுவது சாதனை.
- அருள் தன்னை அன்னையாக நாடுவதை அறிவது பேரருள்.
- நல்லவனும், கெட்டவனும், தோல்வியடைபவனும், வெற்றியடைந்தவனும் தன் இச்சைப்படியே சாதிக்கிறான்.
- **மறைந்த பிரம்மம் மறந்தது ஜடம். நினைவுபடுத்துவது அருள். ஏற்பது அறிவு. நடப்பது யோகம்.**

### ஜீவிய மணி

நாம் பிறர்மீது கொள்ளும் அக்கறை அவர்மீது நம் ஆதிக்கத்தைச் செலுத்துவதாக இருக்கக் கூடாது. இது அகந்தையாகும். அருளை வற்புறுத்தித் தருவதாகவும் இருக்கக்கூடாது. அளவுக்கும் கடமைக்கும் உட்பட்டு, பொறுப்புணர்ச்சியும் உழைப்பும் உள்ளவர்க்குச் செய்யும் உதவியும் கொடுக்கும் ஆலோசனையும், அபரிமிதமாகப் பலிக்கும். இத்தகு அகந்தையற்ற அக்கறையே அடுத்தவர்க்குப் பயன்படும். பொறுப்புணர்வால், அளவுடன் செயல்பட்டு, பிறருக்கு உதவுதல், அன்னையின் பெரும் பலனைத் தரும்.



## அன்பர் அனுபவம்

கவிதா குமார், சிட்லபாக்கம்

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் கவிதா குமார். நான் சென்னையில் சிட்லபாக்கம் என்ற பகுதியில் வசித்து வருகிறேன். ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை அவர்களின் பரிபூரண நல்லாசிகளுடன் நான் என் அனுபவத்தினை தங்களுக்கு கூற விரும்புகிறேன்.

அன்னை எனக்கு முதன்முதலில் அறிமுகமானது திண்டுக்கல்லில் உள்ள மையத்தின் மூலம்தான். என் அம்மாவின் வீடு திண்டுக்கல்லில் உள்ளது. அங்கிருந்து இரண்டு வருடங்களுக்குமுன் நான் B.Ed. படித்தேன். அப்பொழுது என் கணவர் சென்னையில் இருந்தார். நான் ஒருமுறை என் குழந்தையுடன் சென்னை வந்து திண்டுக்கல் திரும்பும் பொழுது குருவாயூர் எக்ஸ்பிரஸில் பயணம் செய்தோம். இரவில் பயணம் செய்ததால் என் கணவர் என் சிறு கைப்பையை பெரிய பையில் வைத்திருந்தார். நாங்கள் விடியற்காலை மூன்று மணியளவில் திண்டுக்கல்லில் இறங்க வேண்டும் என்பதால், பெரிய பையில் தலையணை, போர்வையை மடித்து உள்ளே வைத்தார். அப்பொழுது கைப்பையை வெளியே எடுத்து வைத்தவர் பின் உள்ளே வைக்க மறந்து விட்டார். நாங்கள் train-னிலிருந்து இறங்கி ஆட்டோ பிடித்து வீட்டிற்கு வந்து ஆட்டோவிற்கு பணம் கொடுக்க கைப்பையைத் தேடினோம். காணவில்லை. எப்போதும் டென்ஷனாகும் என் கணவர் இப்பொழுது கோபப்படாமல் ‘நீ உள்ளேபோ, நான் ஸ்டேஷன் மாஸ்டரிடம் புகார் கொடுத்துவிட்டு வருகிறேன்’ என்று கிளம்பினார்.

என் தோழி ரம்யா மூலம் ‘அன்னையின் தரிசனம்’ என்ற புத்தகத்தினை அன்னையின் பக்தை ஆவதற்குமுன் நான் படித்திருக்கிறேன். அது எனக்கு நினைவில் வந்தது. உடனே நான் வீட்டில் ‘என் கைப்பை கிடைக்க வேண்டும். அதிலுள்ள என் கணவரின் License, Pan card, ATM Card, Mobile phone, Election ID card மற்றும் 450 ரூபாய் பணம் இருந்தும்

பத்திரமாகக் கிடைக்க வேண்டும்' என வேண்டினேன். பின் அன்னையே இவ்வேண்டுகோள் தங்களுக்கு சமர்ப்பணம். பை கிடைத்தவுடன் திண்டுக்கல் சென்டருக்கு வருகிறேன் என வேண்டி காணிக்கையையும் எடுத்து வைத்தேன்.

இதற்கிடையில் என் கணவர் திண்டுக்கல் ஸ்டேஷன் மாஸ்டரிடம் புகார் செய்ததும், அவர் மதுரை ஸ்டேஷன் மாஸ்டரை தொடர்பு கொண்டு பேச, அவர் ரயில்வே போலீஸை அனுப்பி மதுரை ரயில்வே ஸ்டேஷனில் குருவாயூர் எக்ஸ்பிரஸை சோதனை செய்ததில் அதில் என் கைப்பையை கண்டுபிடித்த-தாகவும், வந்து அடையாளம் கூறி பெற்றுக் கொள்ளவும் என்று கூறினார். பின்பு என் கணவர் மதுரை சென்று என் கைப்பையை வாங்கி வந்தார். பின்னர் நான் பிரார்த்தனை செய்ததுபோல் நாங்கள் திண்டுக்கல் சென்டருக்குச் சென்று மனதார அன்னைக்கு நன்றி கூறினோம்.

இதுபோல் பலமுறைகள் அன்னை எங்களைக் காப்பாற்றி உள்ளார். ஒருமுறை மிகுந்த மன உளைச்சலுடன் இருந்தபோது அன்னையைப் பிரார்த்தனை செய்தேன். அப்பொழுது பெரிய நல்ல கல்லூரியில் எனக்கு வேலை கிடைத்து, அதன் மூலம் நல்ல பலன் பெற்று வருகிறேன். இதை என் வாழ்நாளில் மறக்கவே மாட்டேன்.

தற்பொழுது எங்கள் வாழ்க்கையிலும், என் குடும்பத்திலும் அன்னையும், பகவானும் அங்கமாகவும், குடும்பத்தினை நிர்வகிப்பவர்களாகவும், எங்கள் வீடு முழுவதும் நிறைந்-துள்ளனர். அன்னையை நம்பியதால் இன்று எல்லாவிதமான நலன்களும், வளங்களும் பெற்று சந்தோஷமாக இருக்கிறேன் என்பதில் சந்தேகமேயில்லை.

### ஜீவிய மணி

***யார் மீது பிரியப்பட்டாலும், கோபப்பட்டாலும் நாம் யார் என அறியும் நேரம் அது.***



**அன்னை இலக்கியம்**

## பொறுமையால் வென்றாயோ?

இல. சுந்தரி

கழுத்து மாலையின் மலர் மணம் மாறாத நிலையில், புதுமணத் தம்பதிகளான வாசுவும், பத்மாவதியும் காரை விட்டு இறங்கி வீட்டு முகப்பிற்குவர, அவர்களை வரவேற்க செட்டியாரும், அவர் மனைவி மாதரசி அம்மாளும் ஆவலுடன் காத்திருந்தனர். மாதரசியம்மாள் மங்கல ஆரத்தி சுற்றி மகனுக்கும், மருமகளுக்கும் நெற்றித் திலகமிட்டு திருஷ்டி கழித்து மனங்கொள்ளா மகிழ்வுடன் 'வலது காலை எடுத்து வைத்து வாருங்கள்' என்கிறாள். செட்டியார் விலகி நிற்கிறார். பத்மாவதி புன்னகை தவழ வாசுவின் கரம்பற்றி உள்ளே வந்தவுடன் மாமன் மாமியை நமஸ்கரிக்க வேண்டும் என கணவனை ஜாடையில் தூண்டுகிறாள். இருவரும் மாதரசி-யம்மாளை நமஸ்கரிக்க, அவர் அன்புடன் அவர்களை வாழ்த்துகிறாள். ''செட்டியாரை நீயே கும்பிட்டுக் கொள்'' என்று கூறிய வாசு விடுவிடென்று மாடிப் படியேறுகிறான்.

செட்டியார் முகம் வாட, கண்கலங்க தம் அறைக்குள் சென்று விடுகிறார். ஒன்றும் புரியாது பத்மாவதி நிற்க, மாதரசியம்மாள் அவளிடம், ''அவனுக்கு அப்பாவிடம் சிறு வருத்தம். வேறொன்றுமில்லை. மற்றபடி அவன் தங்கம். நீ அவன் மனம் கோணாமல் நடந்து அவனை மகிழ்வுடன் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று அன்புடன் கூறி, ஆதரவாய் தலையை வருடி அனுப்பி வைக்கிறாள்.

எவ்வளவு அன்பான மாமன், மாமி என்று பத்மாவதி மனம் குளிர்கிறாள். மாடிக்குச் சென்று தன் கழுத்து மாலையைக் கழற்றும்முன் வாசுவை நமஸ்கரிக்க குனிகிறாள். 'வேண்டாம் பத்மா என் மனைவி என் காலில் விழுவது எனக்குப் பிடிக்காது. பெண்கள் அடிமைத் தளையில் சிக்குவது சரியல்ல. நாமிருவரும் சமமானவர்கள். என்னிடம் ஏதேனும் குறை கண்டால் நீ

அஞ்சாது எடுத்துரைத்து என்னைத் திருத்த வேண்டும். பயந்து, என் தவறுகளுக்கு நீ உடன்படக்கூடாது' என்றான்.

'அப்படியென்றால் என் மனதில் பட்டதைச் சொல்லவா?' என்றாள்.

'நிச்சயமாகச் சொல், தயங்க வேண்டாம்' என்றான். 'நீங்கள் உங்கள் அம்மாவை வணங்கி விட்டு, அப்பாவை நிராகரித்தது தவறு. அவர் கண்கலங்கி நின்றது என்னை வேதனைப்படுத்தியது. பெற்றவர் மனம் கலங்க நாம் நலமாக வாழ முடியுமா?' என்றாள்.

'உண்மை தெரிந்தால் நீ என் செயலைத் தவறு எனக் கூறமாட்டாய்'.

'என்னிடம் கூறத்தக்கது என்றால் கூறுங்கள்' என்றாள்.

'உன்னிடம் மறைக்கத் தேவையில்லை. கணவன் மனைவிக்குள் இரகஸ்யம் நான் விரும்பாதது' என்றான்.

நாம் வீட்டிற்குள் வந்ததும், ''முதலில் அவர்களைக் கும்பிட்டுக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்களே, அந்தப் படத்திலிருந்தவர் யார்? என்றாள்.

'அவர்தாம் என்னைப் பெற்ற தாய். செட்டியாரும் மாதரசியம்மாளும் என்னைப் பெற்றவர்கள் அல்லர்'.

'அப்படியா? ஆனால் அத்தை அவ்வளவு பாசம் காட்டுகிறார்களே நம்மிடம்'.

'ஆம்! அந்தப் பாசம்தான் என் அன்பிற்கும் என் கோபத்திற்கும் காரணம்'.

'அது எப்படி? ஒரே விஷயம் அன்பிற்கும், கோபத்திற்கும் காரணமாகும்?'

'நான் பணக்காரச் செட்டியாரின் மகனில்லை ஏழை பிராமணனின் மகன் என்ற உண்மை தெரிந்தபின் நீ என்னை நேசிப்பாயா?'

'என்ன கேள்வியிது? நான் நேசித்தது உங்களை. பணத்தையல்ல. என் தெய்வத்தின் மீது எனக்குள்ள பக்தி என்றும் மாறாது'.



'உண்மையில் உன்னை மனைவியாகப் பெற்ற நான் பாக்யசாலி. ஆனால் இந்த உயர்வை என் தாய் காணக் கிடைக்காமல் செய்த பாவி நான்.' (என்று கூறி கண் கலங்கினான்)

தாய் என்பவள் என்றுமே நம்மை அன்புடன் நோக்குவாளே தவிர பாவியாய்க் காணமாட்டாள்.

எனக்குள் ஒரு சோகக் கதையுண்டு. அதை நான் யாருடனும் பகிர்ந்து கொள்ள விரும்பியதில்லை. ஆனால் நீ என் வாழ்வில் முக்கிய பங்கேற்பவள் என்பதால் நீ அதைத் தெரிந்து கொள்வது நல்லது. நீ காண்பது போல் நான் மாதரசியம்மாள் செட்டியார் தம்பதிகளுக்குப் பிறந்த மகனில்லை.

ஆனால் அத்தை உங்களிடம் அவ்வளவு அன்பு காட்டுகிறார்கள். மாமாவும்தான்.

மாதரசியம்மாவின் குழந்தைபாசம்தான் நான் அவர்கள் மகனாக வளரக் காரணம். புருஷோத்தம ஐயர் மீனாட்சியம்மாளின் குழந்தையாகப் பிறந்தேன். உண்மை தெரியாத நிலையில் நானே என் தாய் இறக்கக் காரணம் ஆனேன். என் வரலாறு நான் அறிந்திருக்கவில்லை. செட்டியார் தம்பதிகளின் சொந்த மகன் என்றே என்னை நினைத்தேன்.

ஒரு நாளிரவு செட்டியார் என்னையீன்றவளிடம் தகாத முறையில் நடக்க முயன்ற போது தற்செயலாக அதை நான் காண நேர்ந்தது. இளம் வயது. தாங்க முடியாத அவமான உணர்வால் துடித்துப் போய் கூச்சலிட்டேன். அப்போதுகூட செட்டியார் நல்லவர். என்தாய்தான் கெட்டவள் என்று எண்ணத் தோன்றியது. அதன் பிறகு அவளைப் பார்க்கவே பிடிக்கவில்லை. அவளை வீட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று சினந்தேன். மாதரசியம்மாளோ மிகவும் வேதனைப்பட்டார். ''அவசரப்பட்டு எதுவும் சொல்லாதே வாசு. அவள் மிகவும் நல்ல பெண்மணி. ஏதோ வறுமை காரணமாக நம் வீட்டில் வேலை செய்கிறாள். இதுவரை அவள் நமக்கு எந்தக் கெடுதலும் செய்ததில்லை. நல்லதுதான் செய்திருக்கிறாள்''. என்றார்.

''ஆமாம் ரொம்பவும் நல்லதுதான் செய்திருக்கிறாள். உனக்கே அவள் துரோகம் செய்கிறாள்'' என்று மனவலி தாங்காமல் கத்தினேன்.

காதைப் பொத்திக் கொண்டாள். ''சப்தமாகப் பேசாதே. அவள் காதில் விழந்தால் தாங்க மாட்டாள்'' என்று அவளுக்குப் பரிந்து பேசினார். எனக்கு வியப்பாக இருந்தது. தன் கணவன் ஆசைப்படும் ஒரு பெண்ணைத் தன் எதிரியாக நினைக்காமல் எப்படி அவளுக்குப் பரிந்து பேசினார் என்று வியப்படைந்தேன். ''அம்மா! நீ மிகவும் அப்பாவியாய் இருக்கிறாய். உன் வாழ்வு பறி போகிறது என்றதுடன் (செட்டியாரே என் அப்பா என்று எண்ணி) நீ என் தாய்க்கு (மாதரசியம்மாளுக்கு) துரோகம் செய்கிறாய். உன்னை அப்பா என்று சொல்லவே அவமானமாயிருக்கிறது. நீயும் ஒரு மனிதனா? என்று அவர் மீது ஆத்திரப்பட்டேன்.

அன்று அறைக்குள் சென்று கதவடைத்துக் கொண்டவள்தான் என் தாய். மறுநாள் கதவைத் திறந்த போது பிணமாகியிருந்தாள். என் ஆத்திரம் அடங்கியது. மாதரசியம்மாளோ, ''மீனாட்சி, என் மகன் தெரியாமல் ஏதோ பேசி விட்டான். அவனை மன்னித்துவிடு. எழுந்து வா. எங்களை விட்டுப் போகாதே என்றுகூறி அழுதார்கள்'' சீ! இவளுக்குப் போய் நீ ஏனம்மா அழுகிறாய், போகிறாள் விடு'' என்றேன். ''ஏங்க மீனாட்சியிடம் மன்னிப்புக் கேளுங்க'' என்று செட்டியாரை அழைத்தார்.

அவரோ முகத்தைத் துண்டால் மூடிக் கொண்டு பெரிதாக அழுதார்.

நல்லதாயிற்று. இந்தப் பிணத்தை இழுத்து வெளியே எறியுங்கள். வீட்டைக் கழுவிய பிறகு சொல்லுங்கள். நான் பிறகு வருகிறேன் என்று வெளியேற முனைந்த போது செட்டியாரும், மாதரசி அம்மாளும் என் காலில் வந்து விழுந்தார்கள். எனக்குப் புரியவில்லை. செட்டியார் தம் தவற்றுக்கு மன்னிப்பு வேண்டுகிறார், அவரை மன்னிக்க வேண்டி மாதரசியம்மாளும் காலில் விழுகிறார் என்று நினைத்து, ''நீ ஏனம்மா என் காலில் விழுகிறாய்? இவர் என் காலில்



விழுந்தாலும் இவரை நான் மன்னிக்க மாட்டேன். 'அப்பா' என்று கூப்பிடவும் மாட்டேன். யாரந்த சமையற்காரி? அவளை ஏன் வீட்டுக்குள் சேர்த்தீர்கள்? உண்ட வீட்டிற்கே இரண்டகம் நினைத்தவள்'' என்று கத்தினேன்.

மேலும் என் கால்களை இறுகப் பற்றிக் கொண்டு இருவரும் அழுதனர். மானப் பிரச்சனை வெளியில் தெரிய வேண்டாமென நினைக்கிறார்கள் என்று கருதினேன்.

''வாசு, நாங்களே குற்றவாளிகள் எங்களை மன்னிக்க வேண்டாம். தண்டித்து விடு. நீ வெறுக்கும் மீனாட்சி மாசற்ற தங்கம், அவளை எதுவும் சொல்லாதே. நீதான் அவளுக்கு ஈமக்கடன் செய்ய வேண்டும்'' என்றனர்.

அநாதை பிணமானாலும் அனுதாபம் காட்டுவேன். இவளைப் போன்ற நடத்தை கெட்டவளுக்கு இரங்க மாட்டேன் என்று கூறும் போதே மாதரசியம்மாள் என் வாயைப் பொத்தினார்கள். ''உண்மை தெரியாமல் பேசாதே மகனே. அவள்தான் உன்னைப் பெற்றவள். நான் உன்னைப் பெறவில்லை'' என்று கூறி அழுதார்கள்.

''சீ! இத்தனைக் கேவலமானவளா என் தாய்? அவள் என்தாய் என்றால் மன்னித்து விடுவேன் என்று நினைத்தீர்களா? நல்லவேளை. அவளாகவே இறந்தாள். இல்லையென்றால் நானே அவளைக் கொன்றிருப்பேன்'' என்றேன்.

''இல்லை வாசு. உண்மை தெரிந்தால் நீ எங்களைத்தான் கொன்று விடுவாய்'' என்றார் செட்டியார்.

இத்தனை காலமாக இரவுபகல் பாராது எனக்காகவே பாசம் காட்டி வளர்த்த அவர்களை குறிப்பாக மாதரசியம்மாவை என்னால் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற மனமில்லை.

'என்னம்மா சொல்கிறாய்?' என்று அதிர்ந்தேன்.

'கண்ணா! நான் சொல்வதைப் பொறுமையாக முதலில் கேட்டுவிடு. பிறகு நீ என்ன முடிவு செய்தாலும் நாங்கள் கட்டுப்படுவோம்' என்றார்கள்.

''நீ ஆறுமாத கைக் குழந்தையாய் இருந்த போதே உன் தந்தையார் காலமாகிவிட்டார். ஏழையான உன் குடும்பம் உன்

தந்தையின் பிரிவால் வாடியது. நிற்க நிழலின்றி, இளம் குழந்தையான உனக்குப் பாலூட்டவும் வசதியின்றி உன் தாய் பல கொடுமைகளுக்கு ஆளாகி, ரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டு உன்னையும் கொன்று விட ரயிலில் விழப் போன போது, பயணத்திலிருந்த செட்டியார் உங்களைக் காப்பாற்றி இங்கு அழைத்து வந்தார். மலடியான நான், ஒரு குழந்தைக்காக ஏங்கிக் கொண்டிருந்த நான், பச்சிளம் குழந்தையான உன்னைப் பார்த்தவுடன் பாசத்தால் துடித்து உன்னை உன் தாயின் கையிலிருந்து பறித்துக் கொண்டேன். அவள் எவ்வளவோ கெஞ்சியும் நான் உன்னைத் தர மறுத்தேன். என் ஆவல் நிறைவேறியதில் செட்டியார்க்கும் மகிழ்ச்சிதான். குழந்தையைச் சொந்தம் கொண்டாடாமல் எங்களுக்கே கொடுத்து விட்டால் நாங்களே உன் பிள்ளையைச் சிறப்பாக வளர்ப்பதை நீயும் மூன்றாம் மனுஷியாக இங்கு இருந்து கொண்டே பார்க்கலாம்.இல்லை என்றால் நீ கொலை முயற்சி செய்ததாக போலீஸில் புகார் கொடுப்பேன் என்று செட்டியார் மிரட்டவே, வேறு வழியின்றி உன்தாய் மனம் விரும்பாமலேயே உன்னை விட்டுக் கொடுத்தாள். ஆரம்பத்தில் நல்ல எண்ணத்துடன்தான் உங்களை இங்கு அழைத்து வந்தார். உன் அம்மாவின் இளமையும் அழகும் கவர தவறாக நடக்க முயன்றிருக்கிறார். நான் அப்போது உறுதியாய் நின்று, உன்னை விட்டுக் கொடுக்க முன்வந்திருந்தால் உன் தாய் உன்னுடன் எங்காவது போய் பிழைத்திருப்பாள். நான்தான் குற்றவாளி. உன்னைப் பார்த்தது முதல் உன்னை என் குழந்தையாக்கிக் கொள்ளத் துடித்த என் ஆசைதான் காரணம். உன்தாய் நல்லவள் அவள் வெளியேறிவிடத்தான் துடித்தாள். உன்மீது கொண்ட பாசத்தால்தான், நீ வளரும் சிறப்பைக் கண் குளிரக் காணத்தான் அவள் இங்கேயே தங்கினாள்'' என்றார் மாதரசியம்மாள்.

''வாசு! உன் அம்மா மிகவும் நல்லவள். கற்புக்கரசி. என் விருப்பத்திற்கு என்றும் அவள் உடன்படவில்லை. கடைசி வரை அவள் தன்னைக் காத்துக்கொண்டாள். தாயே மீனாட்சி என்னை மன்னித்துவிடு. என் தவற்றை நான் உணர நீ உயிர்த் தியாகம் செய்துவிட்டாய். நான் திருந்தி விட்டேனம்மா'' என்று



கதறி அழுதார் செட்டியார். ''வாசு நீ எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன். உன் தாய்க்கு நீதான் ஈமக்கிரியை செய்ய வேண்டும். அவள் உனக்காகவே வாழ்ந்து உயிரையும் விட்டுவிட்டாள்'' என்றார்.

என் இளம் பருவத்து நினைவுகள் மனத்திரையில் விசுவரூபம் எடுத்தது.

நான் எட்டுவயதுச் சிறுவனாக இருந்த போது பெரிய பலூனை வைத்து விளையாடிக் கொண்டிருந்தேன். தெருவிற்குப் போகக்கூடாது என்று கேட்டை மூடியிருந்தார்கள். பலூன் பறந்து கேட்டைத் தாண்டி தெருவில் உருண்டது. கேட்டின் மேல் ஏறிக் குதித்து பலூனைப் பிடிக்கப் போனேன். எப்போதும் என் மீதே கண்ணாயிருந்த மீனாட்சியம்மாள் கேட்டைத் திறந்து கொண்டு ஓடி வந்து என்னைப் பிடித்துக் கொண்டு கார் விபத்திலிருந்து காப்பாற்றி, ''வாசு உனக்கொன்றும் ஆகவில்லையே'' என்று பதறினாள். சத்தம் கேட்டு ஓடி வந்த மாதரசியம்மாள், என்னை அவர்களிடமிருந்து பறித்துக் கொண்டு, ''என் பிள்ளை விஷயத்தில் தலையிடாதே-யென்று எத்தனை முறை சொல்வது?'' என்றார். அப்போது அவர் மனம் என்ன பாடுபட்டிருக்குமென்று நான் உணர-வில்லை. மாதரசியம்மாளின் பாசம்தான் பெரிதாகத் தெரிந்தது.

பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்று வெற்றிக் கோப்பையுடன் ஓடி வந்து ''மாதரசி! உன் பிள்ளையைப் பார்'' என்று மகிழ்வுடன் கூவினேன். ( எனக்குக் கோபமோ சந்தோஷமோ எது வந்தாலும் மாதரசி என்று பெயர் சொல்லித்தான் அழைப்பேன். மிகுந்த உரிமையுடன் அதை ஏற்றுக் கொள்வார்.) ஓடி வந்து என்னை கட்டியணைத்து திருஷ்டி கழித்தார். மீனாட்சியம்மாள் ஆவலுடன் என்னைப் பார்த்தபோது மாதரசி கடிந்து கொண்டார். 'உள்ளே போ' என்று கோபப்பட்டார். தானீன்ற மகனைக் கொஞ்ச முடியாத என்னையீன்றவள் துயரம் எனக்கு அப்போது தெரியாது. ஒவ்வொரு செயலின்போதும் என் தாயை ஒதுக்கி மாதரசி வந்ததை அப்போது நான் உணரவில்லை.

ஒருநாள் நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது புரையேறி-யவுடன் மீனாட்சியம்மா தண்ணீர்க் குவளையுடன் ஓடி வந்து என் தலையில் மெல்லத் தட்டி தண்ணீர்க் குவளையை என் வாயில் வைக்க வந்த போது, மாதரசியம்மாள் குவளையை அவர்கள் கையிலிருந்து பறித்து அவர்கள் கையை வெடுக்கென்று தள்ளிவிட்டு, ''பிள்ளை சாப்பிடும்போது உள்ளே வராதே என்று எத்தனை முறை சொல்வது?'' என்று கடிந்து கொண்ட போது என்னையீன்றவள் முகம் வாடிய காட்சி அன்று எனக்குப் பெருமையூட்டியது. இன்று வேதனையளித்தது. அம்மா! உன்னருமை தெரியாது போனேனே. எனக்காக நீ எத்தனை அவலங்களைச் சுமந்தாய். உன் பொறுமையால் நீ இவர்களை வென்றுவிட்டாய். பாவியைப் பெற்றவள் நீ. உனக்கு மழலையின்பம் தராத மாபாவி நான். நான் பெரியவன் ஆன பிறகும் நீ ஏன் உண்மையைக் கூறவில்லை. எத்தனை முறை எனக்கு வரவிருந்த ஆபத்துகளிலிருந்து இந்தக் கையால் என்னைக் காப்பாற்றியிருக்கிறாய்.

*''மாகக் குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்*

*கருதி வளர்த்தெடுத்த கை வேகுதே தீயதனில்*

*வெந்து பொடி சாம்பல் ஆகுதே''* என்று பட்டினத்தாரே உருகவில்லையா? நான் சாதாரண மனிதன். வாய்க்கரிசி இடவே என்னைப் பெற்றாயோ என்று அழுதிட்டேன்.

அன்று முதல் செட்டியாரை அப்பா என்றழைப்பதை விட்டுவிட்டேன். அதுதான் அவருக்கு நானளித்த தண்டனை என்று கூறி முடித்தான் வாசு.

'இப்போது நான் ஒன்று சொல்லலாமா' என்றாள் பத்மாவதி.

'சொல். உன் பேச்சில் உண்மை இருந்தால் நிச்சயம் அதை நான் ஏற்று நடப்பேன்' என்கிறான் வாசு.

'உங்கள் தாய் அத்தையையோ, மாமாவையோ தண்டிக்க எண்ணியிருந்தால் என்றோ செய்திருக்கலாம். உங்களுக்கு உண்மையை அறியச் செய்திருக்கலாம். உங்களைப் பாசமாக வளர்க்கும் அவர்களுக்குத் தீங்கு செய்ய எண்ணாத காரணத்தால் தான் பொறுமையாக எல்லாத் துன்பங்களையும் தாங்கி-யிருந்திருக்கிறார். எனவே, நீங்கள் அவர்களைத் தண்டிப்பதை விரும்ப மாட்டார்கள். பழிவாங்கும் மனப்பான்மை உயர்ந்தவர்-களுக்குரியதன்று. உயர்ந்தவர்கள் எப்போதும் இன்னா செய்தாரை அவர் நாண நன்னயம் செய்து விடுவார்கள் என்று நாம் படிக்கவில்லையா? அதுமட்டுமன்று. மாமாவோ அத்தையோ கெட்டவர்களாக இருந்திருந்தால் உங்கள் தாய் இறந்தபின் உண்மைகளை மறைத்திருப்பார்கள். அவர்கள் எதையும் மறைக்காது கூறியதுடன் நடந்த தவறுகளுக்குத் தாங்களே காரணம் எனப் பொறுப்பேற்கிறார்கள். மன்னிப்பும் கேட்காமல் தண்டிக்கக் கேட்கிறார்கள். நீங்கள் கொடுத்த தண்டனையை ஏற்று வேதனையும் அனுபவிக்கிறார் மாமா. இவ்வளவு நடந்த பின்னும் அத்தை உங்கள் மீது வைத்த பாசம் சிறிதும் குறையாமல் நீங்கள் சந்தோஷமாய் வாழ வேண்டும் என ஆசைப்படுகிறார்கள். அவர்களை ஒதுக்கி தண்டிப்பது முறையல்ல'.

'உங்கள் வளர்ச்சியை, மகிழ்ச்சியை விரும்பும் உங்களைப் பெற்றவர் எங்கும் போக மாட்டார். நம் குழந்தையாக நம்மிடமே வந்து விடுவார்கள்' என்று பரிவுடன் பத்மா கூற இப்போது 'நான் என்ன செய்ய வேண்டும்' என்றான் வாசு.

'கீழே வாருங்கள். வந்து உங்கள் வளர்ப்புத் தந்தையை நமஸ்கரிப்போம்' என்று மிகுந்த பரிவுடன் அவன் கையைப் பற்ற, அவள் உயர்ந்த உள்ளத்தை எண்ணி பெருமித-வுணர்வுடன், 'அம்மா நீ உன் மருமகளைப் பார்க்க எங்களிடமே வந்துவிடு' என்று எண்ணிய வண்ணம் கீழே வந்தான். பத்மா மனம் மகிழ்ந்து உடன் வந்தாள். இருவரும் இறங்கி வருவதைக்கண்ட மாதரசியம்மாள் 'என்னம்மா' என்று பதறி ஓடி வந்தாள்.

வாசுவோ, 'அம்மா! அப்பாவைக் கூப்பிடுங்கள்' என்றான். அப்பாவா? இவன் யாரைச் சொல்கிறான். அவன் தாய் இறந்த நாள் முதலாக அவரை அப்பா என்றழைக்கமாட்டேன். அதுதான் நான் அவர்க்குத் தரும் தண்டனை என்று கூறியதுடன் அவரைச் செட்டியார் என்றல்லவோ குறிப்பிடுவான் என்று சிந்தித்தாள்.

‘மாமாவைக் கூப்பிடுங்கள் அத்தை’ என்று பத்மாவதியும் கூறவே, மாதரசி தம் அறைக்குள் அழுது கொண்டிருந்த செட்டியாரை அழைத்து வந்தாள்.

‘வாங்க மாமா. நாங்கள் உங்களையும் அத்தையையும் சேர்த்து வணங்கி ஆசி பெற வேண்டும்’ என்றாள் பத்மாவதி.

‘இல்லையம்மா வேண்டாம். எனக்கு அந்தத் தகுதியில்லை’ என்று கலங்கி நின்றார் செட்டியார்.

‘வாசுவோ, அப்பா! வாருங்கள்’ என்று அவரைத் தொட்டு அழைக்க, செட்டியார் உருகிவிட்டார்.

‘வாசு! என்னை அப்பா என்றா அழைத்தாய்? என்னை மன்னித்து விட்டாயா’ என்று அவனைத் தழுவிக் கொண்டார்.

‘இல்லையப்பா நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள். இல்லையென்றால் என்னையீன்றவள் என்னை மன்னிக்க மாட்டாள். என்னைப் பெற்றவள் மீண்டும் இங்கு எங்கள் குழந்தையாய் உங்கள் பெயர்த்தியாய் நம்மனைவரின் அன்பையும் பெற்று நம்மை மகிழ்விப்பாள்’ என்று கூறி இருவரையும் இருவரும் நமஸ்கரிக்க செட்டியாரும் மாதரசியும் ஆனந்தக் கண்ணீருடன் இருவரையும் வாழ்த்தினர்.

அவ்வாறே பத்மாவதி வாசுதேவனின் அருமைப் புதல்வியாய் மீனாட்சி பிறந்து அனைவர் அன்பையும் பெற்றாள். செட்டியாரோ, ‘‘தாயே மீனாட்சி’’ என்று குழந்தையைக் காணும் தோறும் கையெடுத்துக் கும்பிடுவார்.

ஏன் என்று யாரேனும் கேட்டால் தங்கள் குலதெய்வம் மீனாட்சியாய்க் குழந்தையைக் காண்பதாய்க் கூறுவார்.

**பழிவாங்கும் நோக்கம் அன்னை வழியன்று.**
**பொறுமை தீமை தானே விலக வழி செய்யும்.**

ஸ்ரீ கர்மயோகி

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## க்ஷணத்தில் செயல்படுவது அன்னை

டெல்லியில் டிராபிக்கான நேரத்தில் wrong lane தவறான பாதையில் கார் நுழைந்து முன்னும் போக முடியாமல், பின்னும் திருப்ப வசதியின்றி மணிக்கணக்காக வதையும் அன்பர் 'அம்மா' எனக் கூக்குரல் எழுப்பினார். அதே நேரம் Police என்று எழுதிய வேன் வந்ததை நிறுத்தினால் ஏராளமான இளைஞர் உள்ளே இருந்தனர். அன்பர் அவதியைக் கேட்டு ரோடில் குறுக்கே கைகோர்த்து மாலையாக நின்று டிராபிக்கை நிறுத்தி அன்பரை வண்டியைத் திருப்பச் சொல்லி சிறை மீட்டனர்.

- க்ஷணத்தில் அன்னை செயல்படுவார்.
- க்ஷணத்தில் செயல்படாதது அன்னை சக்தியில்லை.
- அவதி எழாமல் அன்பருக்குக் குரல் எழாது.
- எங்கும், எந்த நேரமும் உள்ள அன்னையை அழைக்க நாம் ''மேஷ ரிஷபம்'' பார்ப்பது சரியில்லை.
- அன்னையை எந்த நேரமும் எல்லா இடத்திலும், எந்த காரணமுமின்றி நெஞ்சு இடைவிடாமல் அழைப்பது பக்தி, நம்பிக்கை.
- அழைப்பு ஆத்ம சமர்ப்பணம்.

## அன்பு நிறைந்த வாணல் சட்டி

ரூபாய் 100-க்கு வாங்கிய வாணல் சட்டி மீது அன்பருக்குப் பாசம் ஏற்பட்டு அத்துடன் குழந்தை போல் பேசி ''கொஞ்சுவது'' அன்பர் உறவு. இது நெடுநாள் நடந்தது. வாணல் சட்டியை எடுக்கும்பொழுது மனம் அன்பருக்கு நிறையும். புதுச்சாமான்கள் விற்க கம்பெனி மேனேஜர் வீட்டிற்கு வந்தவர் பழைய சாமான்களுக்கு மாற்றுத் தர முன்வந்த பொழுது, அன்பரிடம் அதற்குரியவை இல்லை. மானேஜர் இந்த வாணல் சட்டியை மாற்றுக்குக் கேட்டார். கொடுக்க மனம் வரவில்லை. அதற்கு ஈடாக அதிகப் பணம் தர முன் வந்தார். வாங்கியது போய் 100-க்கு மாற்றில் 500 ரூபாய் 600 ரூபாய் தர முன்வந்தார். சட்டி மீது பற்று பாசமாயிற்று.

- 1,300 ரூபாய் கொடுத்து மேனேஜர் வாங்கினார்.
- சட்டி சேவை செய்ய முடிவு செய்து, பணத்தால் செய்தது போலும்.
- உணர்ச்சி உறவு கொள்ளும்.
- பெற்றது ஜடமானாலும் கொடுக்கத் தவறாது.
- பணம் தெரிகிறது, மனம் தெரிவதில்லை.
- பக்தி, நம்பிக்கை, நன்றி எழுந்தால் எந்த நேரமும், எவரும் உடனே பெறுவர்.
- பெற்றவர் நன்றியைத் தவறாது தெரிவிப்பார்.
- சட்டி தன் கடைமையச் செய்தது.